விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 12 திங்கட்கிழமை (29.08.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 253

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டம்

# ஜெனிவாவில் இலங்கைக்கு தடம்

# தப்பிப்பிழைக்க அரசு பிரயத்தனம்

(கொழும்பு)

ஜெனிவாவில் செப்ரெம்பர் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான பிரச்சினை எழுப்பப்படலாம் என்று எதிர்பார்க்கும் அரசாங்கம் அதனை முறியடிப்பதற்காக முழுவீச்சில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்காக வெளிநாடுகளில் உள்ள இலங்கையின் இராஜதந்திரக் குழுக்கள் உசார் படுத்தப்பட்டுள்ளன. (20ஆம் பக்கம் பார்க்க)

## தூக்குத்தண்டனையை நிறுத்தக்கோரி இளம் பெண் தீக்குளித்து மரணம்

### காஞ்சிபுரத்தில் நேற்று மாலை சம்பவம்

(காஞ்சிபுரம்)

மரண தண்டனையினை எதிர்நோக்கியிருக்கின்ற முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோரின் மரண தண்டனையினை நிறுத்தக் கோரி காஞ்சிபுரத்தில் இளம்பெண் தீக்குளித்து தற்கொலை செய்துள்ளார்.

நேற்றுமாலை இந்தசம்பவம் இடம்பெற்றுள்ளது. 27 வயதுடைய செங்கொடி என்ற இளம் பெண்ணே தன்னைத் தானே எரித்து தனது உயிரை மாய்த்திருக்கின்றார். இந்தச் சம்பவம் காஞ்சிபுரம் தாசில்தார் அலுவலகத்தின் முன்பாக (20ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாத சந்தேக நபர்களை விடுதலை செய்ய முடியாது-சுசில்

(கொழும்பு)

பயங்கரவாத சந்தேக நபர்களை விடுதலை செய்ய முடியாது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கட்சியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதன் காரணமாக, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அல்லது அவசரகாலச் சட்டத்தின் கீழ் அல்லது இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யக் கூடிய சாத்தியமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாத சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரணை நடத்துவதற்கு போதியளவு அதிகாரமும் (20ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடைநீங்கும்

(கொழும்பு)

அவசர காலச் சட்டம் நீக்கப்பட்டதன் மூலம் உயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை ஆகியன ரத்தாவதாக சட்ட வல்லுனர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

அவசர காலச்சட்டம் நீக்கப்பட்டுள்ள நிலையில் அதனுடன் தொடர்புடைய சட்டங்களும் வலுவிழப்பதாக சிவில்உரிமைகள் அமைப்பின் சட்டப்பணிப்பாளர் சாலிய எதிரிசிங்க தெரிவித்துள்ளார்

அவசரகாலச் (20ஆம் பக்கம் பார்க்க)

# எனது அப்பாவைக் காப்பாற்ற தமிழகம் சென்று போராடுவேன்!

### முருகனின் மகள் ஹரித்திரா தெரிவிப்பு


(சென்னை)

எனது அப்பா இதுவரை சிறைச்சாலையில் இருந்து வந்தார் என்ற மகிழ்ச்சியில் இருந்தேன். ஆனால் இப்போது அதையும் பறிக்கப் பார்ப்பது நியாயமற்றது. இதனால் நான் தூக்கமின்றித் தவிக்கிறேன். எனது அப்பாவைக் காப்பாற்ற தமிழகம் வந்து அங்கு போராடி வருவோருடன் இணைந்து போராட விரும்புகிறேன்.

இவ்வாறு இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனையை எதிர்நோக்கியுள்ள முருகன் மற்றும் இவ்வழக்கில் தூக்குத்தண்டனை பெற்று பின்னர் தண்டனைக் குறைப்பினால் ஆயுட்தண்டனை பெற்றநளினி தம்பதிகளின் மகள் ஹரித்திரா தமிழ் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

நளினி கைது செய்யப்பட்ட போது நிறைமாத கர்ப்பிணியாக இருந்தார். வேலூர் சிறைச்சாலையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## தென்னாபிரிக்க அதிபருடன் புலிகளின் நெருக்கம்



(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தென்னாபிரிக்க அரசுடனும் அங்கே இருக்கும் பல நாடுகளோடும் கொண்டுள்ள நெருக்கமான தொடர்புகள் தொடர்பாக இலங்கை பெரும் அதிர்ச்சியடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

புலிகள் சமாதான காலத்தில் அதன் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனூடாகவும் மற்றும் இதர சிரேஷ்ட உறுப்பினர்களூடாகவும் ஆபிரிக்காவில் உள்ள பல நாடுகளிடம் நட்புறவை வளர்த்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எரித்திரியா, நைஜீரியா மற்றும் சூடான் போன்ற நாடுகளில் அவர்கள் செயல்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும் இலங்கை அரசு கவலை வெளியிட்டுள்ளது. சமீபத்தில் வெளியான புகைப்படம் தொடர்பாகவும் இலங்கை அரசு பெரும் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளது.

தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜக்கொப் ஸுமா, சு.ப. தமிழ்ச்செல்வனுடன் தனது வீட்டில் வைத்து உரையாடும் இப் புகைப்படம் தற்போது வெளியாகியுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவில் சூறாவளி

## ரொபேர்ட் ஓ பிளேக்கின் இலங்கை விஜயம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி ராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக் இவ்வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் வீசும் இரேன் சூறாவளியே இதற்குக் காரணம்.

இன்று திங்கட்கிழமை முதல் 31ம் திகதி புதன்கிழமை வரை அவர் இலங்கைக்கு விஜயம் செய்து அரசியல் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள், சிவில் சமூக பிரதிநிதிகள், மதகுருமார்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரை சந்திப்பார் என முன்னர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்திருந்தது.

எனினும் இவ்விஜயத்திற்கான புதிய திகதிகள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ந-5)

வெள்ளி முதல் உங்கள் கைகளில்.....

பத்திரிகை வடிவிலும்

கணினிக்களம்



அனைத்து விற்பனை நிலையங்களிலும் கிடைக்கின்றது

தொழில் நுட்ப வல்லுனர்கள் மற்றும் முன்னாள் கல்வி அதிகாரிகளின் இணைந்த வழிகாட்டலுடன் வெளிவருகின்றது

- சமகால தொழில் நுட்ப விடயங்கள்
- கணினி கற்கைநெறிக்கான வழிகாட்டல்
- க.பொ.த(சா/த) கணித.விஞ்ஞான மாதிரி வினாத்தாள்கள்

Hotline:077/8688517, 078/4727404, 075/8385895

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை விமானப்படையின் விமானம் சென்னையில் அவசரத் தரையிறக்கம்

## படை அதிகாரிகள் வெளியேற அனுமதி மறுப்பு

(சென்னை)

இலங்கை விமானப்படை விமானமொன்று நடு வானில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறை அடுத்து சென்னை அண்ணா விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து ஆந்திர மாநிலத்தின் விசாகப்பட்டினம் விமான நிலையம் நோக்கிப் பறந்துகொண்டிருந்த போதே விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

விசாகப்பட்டினத்தில் உள்ள கிழக்குக் கடற்படைத் தலைமையகத்திற்கு இந்த விமானத்தில் 7 இலங்கை இராணுவ அதிகாரிகள் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

விமானத்தின் நான்கு இயந்திரங்களில் இரண்டு செயலிழந்து போயுள்ளதாக விமானி சென்னை விமான நிலைய அதிகாரிகளுக்கு அவசர தகவல் அனுப்பி தரையிறங்க அனுமதி கோரியிருந்தார்.

விமானத்தில் இலங்கை இராணுவ அதிகாரிகள் இருந்ததால் சென்னை விமான நிலைய கட்டுப்பாட்டு அதிகாரிகள் டில்லியிலுள்ள தலைமையகத்துடன் தொடர்புகொண்டு அனுமதி பெற்ற பின்னரே சென்னையில் தரையிறங்க அனுமதியளித்தனர்.

இராணுவ அதிகாரிகள் விமானத்தில் இருந்ததால் சென்னை விமான நிலையத்தில் ஆயுதம் தரித்த பாதுகாப்பு அதிகாரிகள் தயார் நிலையில் வைக்கப்பட்ட பின்னரே விமானம் தரையிறங்க அனுமதிக்கப்பட்டது.

இதையடுத்து இலங்கை விமானப்படை விமானம் சென்னை விமான நிலையத்தில் நேற்றுக் காலை 8.15 மணியளவில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

பாதுகாப்பாக விமானம் தரையிறக்கப்பட்ட பின்னர் பெங்களூரிலிருந்து உதிரிப்பாகங்கள் கொண்டு வரப்பட்டன.

இலங்கை இராணுவ அதிகாரிகள் 7 பேரையும் விமானத்தை விட்டு வெளியேற சென்னை விமானநிலைய அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. அவர்கள் தொடர்ந்து விமானத்திற்குள்ளேயே தங்கியுள்ளனர்.

சிறிலங்கன் விமானசேவை அதிகாரி ஒருவர் அவர்களைச் சென்று பார்வையிட்டுள்ளார். எனினும் இலங்கை இராணுவ அதிகாரிகள் 7 பேரும் எதற்காக விசாகப்பட்டினம் நோக்கி பயணம் மேற்கொண்டனர் என்பது பற்றிய தகவல் எதையும் பாதுகாப்பு அமைச்சு வெளியிடவில்லை. (ந-5)

# மரண அறிவித்தல்

## சவரிமுத்து சூசைப்பிள்ளை

(B.A.Lond. Hons, Dip in Edu, Dip in Tamil)



இல.11, கதீற்றல் வீதியைச் சேர்ந்த சவரிமுத்து சூசைப்பிள்ளை அவர்கள் 28.08.2011 அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சவரிமுத்து- விக்ரோறியா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் மேரியோசேப்பினின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான யோன் செபஸ்தியாம்பிள்ளை -பிரான்சிஸ்கா தம்பதியினரின் மருமகனும் நிலோபர் டினேந்திரா (Swiss), ஜெறால்ட் திலகேந்திரா (UNOPS), றேமன்ட் லோகேந்திரா (Instructor Computer Point), அனற் ஜறாங்கனி (Canada), ஆகியோரின் பாசம்மிகு தந்தையும், காலஞ் சென்ற அந்தோனிப்பிள்ளை, மேரிப்பிள்ளை, காலம் சென்ற எலிசபெத், மொனிக்கம்மாவின், அன்புச் சகோதரனும் மரீனா வசந்தினி (Swiss), மரீனா (ஆசிரியை யா/புனித மரியாள் வித்தியாலயம்), பற்றீசியா ஆசிரியை யா/புனித சாள்ஸ் வித்தியாலயம், அமலதாசன் (Canada), ஆகியோரின் அன்பு மாமனாரும், டீனுகா, டிலக்சன், அட்லிக்கா, அல்பாங்கா, சஞ்ஜியா தியோரன், திபூசன், தினுசன், அனுசிக்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல.11, கதீற்றல் வீதி, யாழ்ப்பாணம். (6012)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

# புதுடில்லி மாநாட்டில் நடந்தது என்ன?

# முன்னாள் எம்.பி. கஜேந்திரன் விளக்கம்

(டில்லி)

**புதுடில்லியில் கடந்த 23, 24 ஆம் திகதிகளில் நடைபெற்ற இலங்கையிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகளுடனான மாநாட்டில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் வெளியிட்ட அறிக்கை இங்கு தரப்படுகிறது.**

இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும், ஆளும் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தருமான சுதர்சன நாச்சியப்பன் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த 23, 24 ஆம் திகதிகளில் டில்லியில் இடம்பெற்ற இலங்கையிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இடையிலான மகாநாட்டில் தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் தீர்மானத்தை எட்டுவதற்கு அதில் கலந்து கொண்டிருந்த அனைத்துக் கட்சிகளும் ஆரம்பத்தில் இணங்கியிருந்தன.

எனினும் 24 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணியளவில் அந்த மகாநாட்டு மண்டபத்திற்கு வந்திருந்த சுதர்சன நாச்சியப்பன் 13 ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் தீர்மானத்தை வலியுறுத்துங்கள் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டதுடன் ஏற்கெனவே அங்கு தயாரிக்கப்பட்டு கட்சிகளிடையே இணக்கப்பாடு காணப்பட்டிருந்த அறிக்கையினைப் பார்வையிட்டு அதிலுள்ள மூன்றாவது பந்தியை மாற்றி எழுதும்படி மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறிவிட்டு அங்கிருந்து சென்றார்.

அதன் பின்னர் உடனே தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்ட கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளான புளொட் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரி மற்றும் ஈ.என்.டி.எல்.எப்., ஈ.பி.ஆர்.எல்.எப். (பத்நாபா அணி) ஆகிய நான்கு தரப்புக்களும் அறிக்கையின் இறுதிப் பந்தியில் சேர்க்கப்பட்டிருந்த சுய நிர்ணய உரிமை என்ற சொல்லை நீக்க வேண்டும் என்று பிடிவாதமாக இருந்ததுடன் அது நீக்கப்படாவிட்டால் கையொப்பமிட மாட்டோம் என்று திட்டவட்டமாக மறுத்தனர்.

அத்துடன் தமிழ்த் தேசம், சுய நிர்ணய உரிமை ஆகிய சொற்களை நீக்கி வேறு ஒரு அறிக்கையைத் தயாரித்து அதில் கையொப்பமிட வேண்டும் என வற்புறுத்தினர்.

தமிழ்த் தேசம், சுய நிர்ணய உரிமை ஆகிய சொற்களை நீக்கி தயாரிக்கப்பட்ட அறிக்கைக்கு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பாக சென்றிருந்த அதன் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகிய இருவரும் திட்டவட்டமாக மறுப்புத் தெரிவித்தனர்.

இதன் பின்னர் சுயநிர்ணய உரிமை மற்றும் தமிழ்த் தேசம் ஆகிய விடயங்களை வலியுறுத்தி தயாரிக்கப்பட்ட அறிக்கையை கூட்டமைப்பிலுள்ள கட்சிகளான தமிழரசுக் கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றும் காங்கிரஸ் இணைந்துகையொப்பமிட்டு அனுப்புவோம் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கஜேந்திரன் ஆகியோர் கேட்டுக் கொண்டபோதும் அதற்கு கூட்டமைப்பினர் இணங்கவில்லை. இந்நிலையில் சுய நிர்ணய உரிமை மற்றும் தமிழ்த்தேசம் ஆகிய விடயங்களை வலியுறுத்தித் தயாரிக்கப்பட்டிருந்த அறிக்கையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரினால் கையொப்பமிடப்பட்டு வெளியிட்டது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வை வலியுறுத்தி 7ஆம் திகதி டில்லியில் ஆர்ப்பாட்டம்

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்பாடு

இலங்கையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கோரிக்கை விடுத்து இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்வரும் 7 ஆம் திகதி டில்லியில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளது. இது தொடர்பில் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் பிரகாஷ் காரத் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் முற்றிலும் அழிக்கப்பட்ட பின்னரும் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். அப்போது முள்வேலி முகாம்களில் அடைக்கப்பட்டவர்களுக்கு அரசியல் ரீதியாக தீர்வு வழங்கப்படுமென இலங்கை அரசு வாக்குறுதி அளித்தது. ஆனால் அதனை நிறைவேற்ற இலங்கை அரசு தவறிவிட்டது. தற்போதும் பலர் அகதிகள் முகாம்களில் உள்ளனர். அவர்களை இலங்கை அரசு மீள் குடியேற்றம் செய்யவில்லை. இந்நிலையில் போர்க்குற்ற விசாரணை, மீள்குடியேற்றம், அரசியல் தீர்வு ஆகிய 3 பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வலியுறுத்தி எதிர்வரும் 7 ஆம் திகதி டில்லியில் போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளோம் என இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் தெரிவித்துள்ளார். (ந-5)

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குமாறு கோரிக்கை

## பிரதமர் மன்மோகனுக்கு த.தே.கூ. கடிதம்

(மட்டக்களப்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவருக்கும் பொது மன்னிப்பு வழங்குங்கள் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த 20 வருடங்களாக சிறைவாசம் அனுபவிக்கும் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவருக்கும் மரண தண்டனை நிறைவேற்ற உத்தரவிடப்பட்டுள்ளமையை அறிந்து மிகவும் கவலையும், வேதனையும், அதிர்ச்சியும் ஈழத் தமிழர்களும், உலகத் தமிழர்களும் அடைந்துள்ளோம்.

சொல்லொணாத் துன்பங்களும், சோதனைகளும், வதைகளும் சந்தித்த ஈழத் தமிழர் நாம் கடந்த 61 வருடங்களாக அடிமையாகவே வாழ்கின்றோம். இலட்சக்கணக்கான உயிர்களை இழந்து, உடைமைகளைப் பறிகொடுத்து அல்லும்பகலும் எப்போது நிம்மதியான வாழ்வு கிடைக்கும் என்று ஏங்கித் தவிக்கின்றோம்.

இந்த ஏக்கத்திற்கு விடிவு கிடைக்க எமது தொப்புள்கொடி உறவாக இருக்கும் பாரதநாடு எமக்குக் கைகொடுக்கும் என்ற நம்பிக்கை ஈழத் தமிழர்கள் மனங்களில் இருந்து இன்னும் அகலவில்லை. இந்நிலையில் தற்போது எமது உடன் பிறப்புக்களான முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் மரணதண்டனைச் செய்தி எம்மை மிகவும் சோகத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

இந்த மூவரையும் உயர் தண்டனையான மரண தன்டணையிலிருந்து மன்னிப்பு வழங்க பாரதப் பிரதமராகிய உங்களாலேயே முடியும். இன்று உலகத் தமிழினமே உங்களிடம் மண்டியிட்டு இந்த மூவருக்கும் மன்னிப்பு வழங்குமாறு பணிவாக வேண்டுகின்றனர்.

கருணை உள்ளம் கொண்டு மனம் இரங்கி இந்த வேண்டுதலை நிச்சயம் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையில் ஈழத் தமிழர் சார்பாக இரந்து கை கூப்பிக் கேட்கின்றேன் என மேற்படி கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-5)

# குடும்பஸ்தர் மீது ஏழாலையில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வீதியில் பயணித்துக்கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு படுகாயமடைந்துள்ளார். நேற்றிரவு 8.30 மணியளவில் ஏழாலை வடக்குப் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் குண்டுமணி பகீரதன் (வயது- 41) என்ற குடும்பஸ்தரே தாக்குதலுக்கு உள்ளானவராவார்.

கடைக்குச் சென்றுவிட்டு சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த இவர் மீது இனந்தெரியாத நபர் ஒருவர் தலையில் கூரிய ஆயுதத்தால் குத்திவிட்டுத் தலைமறைவாகியுள்ளார்.

படுகாயமடைந்தவர் உடனடியாக அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-8)

# திருத்தம்

நேற்றைய முன்பக்கத் தலைப்புச் செய்தியில் "நீடிக்கப்படமாட்டாது" என்பது நீக்கப்படமாட்டாது என தவறுதலாக வெளிவந்துவிட்டது. அதனை திருத்தி நீடிக்கப்படமாட்டாது என வாசிக்கவும். (ஆ-ரி)


## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி பகுதியில் 2 பரப்பு காணியில் அமைந்த சகல வசதியுடன் கூடிய பெரிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு: 0776181216, 0718475028 (6007)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1979.08.04 காலை 5.30 க்குப் பிறந்த கேட்டை நட்சத்திரத்தில் 2ஆம் பாதம், 58 பாவம், 12இல் செவ்வாயும் 5அடி 5அங்குலம் உயரமுள்ள சவுதியில் தொழில் புரியும் சிறீதரன் அவர்களுக்கு மணமகள் தேவை.

தொடர்புக்கு: 0750413633 (6011)

# இன்று ஒரு தகவல்

## மனம் ஒரு சுமை

ஒரு புகையிரதவண்டி வேகமாகப் பயணித்துக் கொண்டிருந்தது. அது ஒரு புகையிரத நிலையத்தில் தரித்து நின்றது.

அப்போது ஒரு நபர் தலையிலே ஒரு மூட்டையை சுமந்தவாறு உள்ளே ஏறினார்.

இவர் தலையிலுள்ள மூட்டையுடன் ஒரு இடத்தில் அமர்ந்தார். புகையிரதம் தனது பயணத்தை மீண்டும் ஆரம்பித்தது.

இவர் தன் தலையிலே இருந்த மூட்டையைக் கீழே இறக்கி வைக்கவில்லை. சுமந்தபடியே தனது ஆசனத்தில் இருந்து பயணித்துக் கொண்டிருந்தார்.

எதிர் ஆசனத்தில் அமர்ந்திருந்தவர் ''ஏன் இப்படி சுமையுடன் அமர்ந்திருக்கிறீர்கள் சற்று உங்களின் மூட்டையை கீழே இறக்கி வைக்கலாமே'' என்றார்.

''வேண்டாம் பாவம்... தலையிலே வைத்திருக்கும் மூட்டையை கீழே இறக்கி வைத்தால் புகையிரதத்திற்கு பாரம் அதிகமாக இருக்கும்!'' என்றார்.

இப்படி கூறும் நபரைப் பார்த்தால் எமக்குச் சிரிப்புத்தானே வரும். ஏனென்றால், புகையிரதம் என்பது மூட்டைகளைச் சேர்த்து சுமந்துகொண்டு போவது... இவன் அந்த மூட்டையைத் தலையிலே வைத்திருந்தாலும் ஒன்றுதான்... தரையிலே இறக்கி வைத்தாலும் ஒன்றுதான்...

அதனால் புகையிரதத்திற்கு எந்தவித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. அதே மாதிரிதான் எமது மனமும்...! இதுவும் ஒரு தேவையில்லாத சுமை. அநாவசியமாக சுமந்துகொண்டு இருக்கிறோம்.

இதைக் கீழே இறக்கி வைத்தால்... வாழ்க்கைப் பிரயாணம் சுகமாக இருக்கும்! புகையிரதத்தில் பிரயாணிக்கும் நபர் ஒரு மூட்டையை சுமக்கிறார்.

வாழ்க்கைப் பயணத்தில் நாம் மனதைச் சுமக்கிறோம்... இது இரண்டிலும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை.

மனதைக் கீழே இறக்கி வைத்துவிட்டால் பாரமில்லாமல் பறவைகள் மாதிரி பறக்கலாம். ஒரு சீடன் போதிதர்மரை நாடிவந்தான். ''குருவே... நீங்கள் என்னை வெறுமையாக இருக்கச் சொன்னீர்கள். நான் இப்போது வெறுமையாகி விட்டேன். மறுபடியும் நான் என்ன செய்ய வேண்டும்?'' கூறுங்கள் என்று கேட்டான்.

உடனே அந்த குரு பக்கத்தில் இருந்த ஒரு குச்சியை எடுத்து அவன் தலையில் அடித்து விட்டு... ''போய் அந்த வெற்றுத் தன்மையையும் வீசி எறிந்து விட்டுவா!'' என்றார்.

''நான் இப்போது காலியாக இருக்கிறேன் என்று ஒருவன் சொல்லுகிறான் என்று வைத்துக் கொள்வோம்... அது உண்மை இல்லை... ஏனென்றால், ''நான்'' என்ற எண்ணம் இருக்கிறது'' அவனுள்ளே என்றார்.

எந்தச் சிந்தனையும் இல்லாமல் இருப்பது கடினம்தான். ஆனாலும், மனிதன் அதிலே உள்ள நுட்பத்தைப் புரிந்து கொண்டானா...

இவ்வளவு தூரம் தூக்கிச் சுமந்து வந்த அந்த மனத்தின் முட்டாள் தனத்தைக் கண்டு அவனே சிரிப்பான்... என்றார் ஓஷோ.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# மக்களை இராணுவத்தினர் தாக்கியதை எதிர்த்து மனிதஉரிமை மீறல் மனு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு

(கொழும்பு)

நாவாந்துறையில் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உயர் நீதிமன்றில் அடிப்படை மனிதஉரிமை மீறல் மனு தாக்கல் செய்யும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நாவாந்துறை மக்களை நாங்கள் நேரடியாக சென்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம். இதன் பின்னர் அந்த மக்களின் சம்மதத்துடன் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவினைத் தாக்கல் செய்ய உத்தேசித்துள்ளோம். அவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களை இராணுவத் தளபதி பயங்கரவாதிகள் என்று சொல்லியிருக்கின்றார்.

ஆனால், இராணுவம் தான் பயங்கரவாதிகள் போன்று நடந்து கொண்டுள்ளது. இராணுவம் முதலில் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும்.

சந்தேக நபர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டு அப்பாவி மக்கள் மீது மிலேச்சத்தனமாக தாக்குதல்களை நடத்துவதில் என்ன நியாயம் இருக்கிறது? என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(வட்டக்கச்சி)

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி நோக்கி செல்லும் பிரதான வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இப்பிரதான வீதி கடந்த 3 மாதத்திற்கு முன்னர் கிரவல் இடப்பட்டு தார் ஊற்றப்பட்டது. இவ்வீதி தகுந்த முறையில் செப்பினிடப்படாமையால் தற்பொழுது சேதமடைந்து குன்றும் குழியுமாகவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு இவ்வீதியை திருத்தித்தருமாறு மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (ஸ்ரீ-12-86)

# டெங்குநோய் பரவும் வகையில் சூழலை வைத்திருந்த 300 பேருக்கு எதிராக வழக்கு

டெங்கு நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த 300 நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மேல் மாகாண சுகாதார சேவை திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவர்களுக்கு எதிராக மக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் அமல் ஹர்சத் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது டெங்கு நுளம்பு பெருகும் வகையிலான சில சூழல்கள் தெஹிவளை, கல்கிஸ்ஸ, நுகேகொடை, பாணந்துறை ஆகிய பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 85 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 90 |
| தக்காளி | 30 | 40 |
| மரவள்ளிக் கிழங்கு | 45 | 60 |
| கோவா | 30 | 70 |
| கரட் | 50 | 30 |
| பூசணி | 25 | 75 |
| புடோல் | 30 | 40 |
| வாழைக்காய் | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 85 | 70 |
| பாகற்காய் | 80 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 90 |
| பயற்றங்காய் | 90 | 120 |
| லீக்ஸ் | 50 | 60 |
| பீற்றூட் | 20 | 30 |
| கறிமிளகாய் | 35 | 40 |
| முருங்கைக்காய் | 100 | 110 |
| போஞ்சி | -- | 90 |
| கத்தரிதம்புள்ள | 40 | 20 |
| கீரை - 1 பிடி | 08 | 30 |
| தேசிக்காய் | 80 | 110 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 |

# இராசி பலன்

*29.08.2011*
*(ஆவணி 12, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு*
*அமாவாசை முற்பகல் 9.19மணிவரை*
*மகம் பிற்பகல் 1.12 மணிவரை*
*இராகுகாலம் 7.35-9.05 மணிவரை*
*சுபநேரம் 12.05-1.35 மணிவரை*
*நல்லைக் கந்தன் பூங்காவனம்.*

**மேடம்** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், பிள்ளைகளால் பெருமை சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**இடபம்** வாகன சுகத்தால் வளம் காணும் நாள், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், முருகப் பெருமான் வழிபாடு முன்னேற்றம் வழங்கும், அஞ்சல் வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், குடும்பத்தில் சிலரை திருப்திப்படுத்துவதற்காக முக்கிய பொறுப்புக்களை பொறுப்பேற்க வேண்டி வரலாம், உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர்.

**கடகம்** இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரும் நாள், தொலை தூரத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், வாக்கு மேன்மையுண்டு.

**சிங்கம்** குடும்பத்தில் பொறுப்புக்களும் சுமைகளும் கூடலாம், மனக் குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர், திடீர் பயணங்கள் ஏற்படலாம், கற்பனைகள் மிகுதியான நாள்.

**கன்னி** வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் பெறுவீர்கள், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வதன்மூலம் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்** செல்வ நிலை உயரும் நாள், தொழில் நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** விருந்தினர் வருகையுண்டு, பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், எதிர்பார்த்த உதவிகள் வந்து சேரலாம்.

**தனுசு** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியை கொடுக்கும், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் துயரங்கள் தீரும் நாள், கௌரவ குறைவான நாள்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், கணவன்-மனைவியிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரும், குடும்பத்தினருக்காக பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மீனம்** நிர்வாகத் திறமை பளிச்சிடும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் நிறைவேறும், அதிகாரிகள் [illegible]னு கூலமாக நடந்து கொள்வர், [illegible]ய பாக்கிகளை நயமாகப் [illegible]சி வசூலிப்பீர்கள்.

வளவன்

# மருதங்கேணி மக்களுக்கான நடமாடும் சேவை இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்பிற்கும் நிரந்தர தீர்விற்குமான செயற்றிட்டத்தினால் மருதங்கேணி பிரதேச மக்களுக்கான நடமாடும் சேவை இன்று திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 3.15 மணி வரை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்கச் செயலகத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்நடமாடும் சேவையால் சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பதிவாளர் நாயகத் திணைக்களம், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்கத் செயலகம், பருத்தித்துறை வலயக்கல்விப் பணிமனை, பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி, பருத்தித்துறை பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு, பால்நிலை வன்முறைக்கு எதிரான அமைப்பு, கடற்தொழில் திணைக்களம், விவசாயத் திணைக்களம் பருத்தித்துறை பிரதேசசபை போன்றவை தமது சேவைகளை வழங்கவுள்ளன.

எனவே இப்பகுதி மக்கள் இந்நடமாடும் சேவையில் பங்குபற்றுவதன்மூலம் தங்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதுடன் இந்நிறுவனங்களைப் பற்றிய விழிப்புணர்வையும் பெற்றுக் கொள்ள முடியும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

(ஸ்ரீ-12)

# மர்ம மனிதனின் பிடிக்குள் அகப்பட்ட பெண் தப்பிப்பிழைத்துள்ளார்

## மிருசுவிலில் சம்பவம்

(மிருசுவில்)

மிருசுவில் புனித சென் நீக்கிளார் ஆலயத்தில் நேற்று அதிகாலை மர்மமனிதன் ஒருவரின் பிடிக்கு உட்பட்ட பெண்ணொருவர் சிறு காயங்களுடன் தப்பித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, மிருசுவில் மதகுருமாருக்கு உணவு தயாரிக்கும் தொழிலை மேற்கொண்டுவரும் மேற்படி பெண் ஆலயத்தில் அவருக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் உறங்கிக் கொண்டிருந்த வேளை அதிகாலை 3.30 மணியளவில் கூரை வழியாக உட்புகுந்த நபர் ஒருவர் அங்கிருந்த துணியொன்றினால் அப்பெண்ணின் வாயை கட்ட முனைந்துள்ளார்.

தப்பிக்க முயற்சித்த மேற்படி பெண் கூக்குரலிட்டு போராடியுள்ளார். இதன் போது சிறுகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

எனினும் கூக்குரல் சத்தம் கேட்டு மதகுருமார் அவ்விடத்திற்கு வரவே மேற்படி மர்ம மனிதன் தலைமறைவாகியுள்ளான்.

இது தொடர்பாக ஆலயப் பங்குத் தந்தை கூறியதாவது,

மிருசுவில் நீக்கிளார் ஆலயத்தில் நேற்றையதினம் அதிகாலை 3.10 மணியளிவில் மர்ம மனிதன் ஒருவர் புகுந்து அங்கிருந்த பெண்ணின் கழுத்தை நெரித்து தாக்கியுள்ளான்.

மேற்படி பெண் கதறிய போது அங்கிருந்த சிறிய தொகை பணத்துடன் ஓடி தலைமறைவாகியுள்ளான். மேலும் சம்பவ தினத்திற்கு முதல்நாள் சந்தேகத்திற்கு இடமாக இருவர் ஆலய சூழலில் நடமாடியதாக தான் அவதானித்ததாக தெரிவித்தார்.

மேலும் ஆலயத்திற்கு முன் இராணுவ காவலரண் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இச்சம்பவத்தினால் இப் பிரதேசத்தில் பதற்றநிலை காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-12-85)

# அமைதிக்கான பிரார்த்தனை நிகழ்வு

(கொழும்புத்துறை)

இலங்கை தேசிய சமாதான பேரவையின் யாழ்.மாவட்ட சர்வமத பேரவையின் ஏற்பாட்டில் நாட்டில் அனைத்து மக்களும் வன்முறைகள் இன்றி சமாதானத்துடன் சகோதரத்துவத்துடன் வாழவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டும் அமைதிக்கான பிரார்த்தனை நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் 12 மணி வரை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்திற்கு முன்பாகவுள்ள ரிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி அமைதிப் பிரார்த்தனையில் யாழ்.மாவட்டம் மற்றும் ஏனைய மாவட்டங்களிலிருந்து பௌத்ததேரர்கள், இந்து குருமார்கள், மௌலவிகள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் அமைதியை விரும்பும் அனைவரையும் குறிப்பிட்ட நேரத்திற்கு சமுகமளிக்குமாறு இலங்கை தேசிய சமாதான பேரவையின் யாழ்.மாவட்ட சர்வமத பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

(ஸ்ரீ-12-51)

# சந்நிதியான் மஹோற்சவம் இன்று ஆரம்பம்

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை காலைத்திருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவன உற்சவமும் 10 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக் சப்பறத் திருவிழாவும் மறு நாள் 11 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் 12 ஆம் திகதி காலை 8 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

மஹோற்சவத்தை யொட்டிசந்நிதியான் ஆச்சிரமத்தில் 15 நாட்களும் சமய சொற் பொழிவுகள் இடம்பெறவுள்ளது.

(ஸ்ரீ-4-35)

# யுத்தத்தின் போது கைவிடப்பட்ட கடற்றொழில் உபகரணங்கள் மீனவர்களிடம் கையளிப்பு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கிலிருந்து கடந்த 2006 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த இப்பகுதி மக்களது கைவிட்டுச் செல்லப்பட்ட படகு மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்கள் என்பன இப்பகுதி இராணுவத்தினரால் சேகரிக்கப்பட்டு நேற்றையதினம் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வு நேற்றைய தினம் காலை 10.30 மணியளவில் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலளார் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் கோ.ஆ.ஸ்டனிஸ்லாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, யுத்தத்தின் போது இடம்பெயர்ந்து வன்னிப் பகுதிக்குச் சென்ற மக்கள்அங்கு இடம்பெற்ற இறுதியுத்தத்தின் போது அனைத்தையும் இழந்து மீண்டும் இப்பகுதியில் மீளக் குடியேறியுள்ளனர்.

இவர்கள் விட்டுச் சென்ற படகுகள், இயந்திரங்கள் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. இவற்றில் 2 யமகா வெளியிணைப்பு இயந்திரங்களை நேற்று இராணுவத்தினர் உரியவர்களிடம் கையளித்துள்ளனர்.

மேலும் 100 இற்கு மேற்பட்ட படகுகள் பதிவு நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு இன்னும் 15 நாட்களின் பின்னர் உரியவர்களிடம் கையளிக்கப்படும் என அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன், யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் திணைக்கள உதவித்திட்டப்பணிப்பாளர் மற்றும் வடமராட்சி கிழக்கு கடற்தொழில் பரிசோதகர் கலிஸ்ரன், மருதங்கேணி பொலிஸ் உத்தியோகத்தர்கள், இப்பகுதி கிராம அலுவலர்கள் மற்றும் இப்பகுதி இராணுவ உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-12-64)

# கும்பாபிஷேகம்

(அச்சுவேலி)

புத்தூர் கிழக்கு சரஸ்வதி வீதி சொக்கடல் வைரவர் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 6.05 மணிக்கு சிவஸ்ரீசதா மகாலிங்க சிவக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் இன்று பிற்பகல் 2 மணிக்கு பூர்வாங்க கிரியைகளும் நாளை செவ்வாய்க்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறும்.

(ஸ்ரீ-12-70)

யாழ்.செய்திகள்

# வரவேற்பு விழா

(நல்லூர்)

மாவட்ட ஆளுநர் லயன் பிரியந்த பெர்னாண்டோ, சர்வதேச லயன்ஸ் சுனில் வட்டவல ஆகியோரை வரவேற்கும் நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

வடமாகாண லயன்ஸ் கழக உறுப்பினர்கள் இணைந்து நடத்தும் இந்நிகழ்விற்கு விழா ஒருங்கிணைப்பு குழுத்தலைவர் வைத்திய கலாநிதி லயன்.வை தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஸ்ரீ-12-134)

# வீதியை புனரமைத்துத்தருமாறு மக்கள் கோரிக்கை

(நல்லூர்)

ஆவரங்கால் சர்வோதய வீதியிலிருந்து விவசாய நிலங்களுக்குச் செல்லும் விவிசாய வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் போக்குவரத்து செய்வதில் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

மேற்படிவீதி கடந்த இருபது வருடங்களாகபுனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

அத்துடன் இவ்வீதி இப்பகுதி மக்களின் விவசாய நிலங்களுக்குச் செல்லும் வீதி என்பதால் விவசாயிகள் பொருட்களை கொண்டு செல்வதில் பெரும் சிரமமடைகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு இவ் வீதியை புனரமைத்துக் தரும்படி மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

(ஸ்ரீ-12-134)

# வீடமைப்புத்திட்டத்திற்கு 12 குடும்பங்கள் தெரிவு



(நல்லூர்)

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் வீடமைப்பு உதவிகளை பெறுவதற்கு சமுர்த்தி உதவி பெறும் 12 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா ஒன்றரை இலட்சம் ரூபா வீதம் வழங்ப்படவுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டம் கட்டமாக தெரிவு செய்யப்பட்டு இவ்வுதவிகள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-12-134)



உடுப்பிட்டி கலைமகள் இன்ரநஷனல் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர் செல்லப்பா சோமசுந்தரம் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பணிப்பாளர் கௌரிபாலன் நிற்பதையும் செ.சோமசுந்தரம் சிறுமி ஒருவருக்கு பரிசு வழங்குவதையும் கல்லூரியின் சிறார்கள் ஆசிரியருடன் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மருதங்கேணி செய்தியாளர்)

# தாராள சேவை வழங்கிவரும் சிவசுப்பிரமணியம் அறக்கொடை நிதியம்

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான சிவசுப்பிரமணிய குருக்கள் அறக்கொடை நிதியம் மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்குவதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான பிரதம குருவான அமரத்துவம் அடைந்த சிவ ஸ்ரீ நா.சிவசுப்பிரமணியக் குருக்கள் ஞாபகார்த்தமாகவே இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த2009 ஆம் ஆண்டு நல்லூர் கந்தசுவாமி கோவில் பூங்காவனத் திருவிழாவின் போதே இந்நிதியம் அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிதியமானது ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.



வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து மீள்குடியேறிய பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு வாழும் இரண்டு குடும்பங்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக தையல் இயந்திரங்களை வழங்கியுள்ளது.

அத்தோடு கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்திற்கு கணனித் தொகுதிகளை அன்பளிப்பாக வழங்கி மாணவர்களின் கல்விக்குச் சேவையாற்றியது.

## இந்நிதியத்தின் 2 ஆம் ஆண்டு பூர்த்தி இன்றாகும்

2010ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யாழ்.மத்திய கல்லூரி மாணவர்கள் 28பேருக்கு தலா ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை அன்பளிப்பாக கொடுத்தும் உதவி வந்திருக்கின்றது.

வறுமைக் கோட்டின் கீழுள்ள 5 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

மேலும் நல்லை ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் சிபாரிசின் பேரில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் வறுமைக் கோட்டின் கீழுள்ள இரண்டு பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலைக்கு மின்விசிறியொன்றும் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் வறுமைக்கோட்டின் கீழுள்ள மாணவியொருவருக்கு துவிச்சக்கர வண்டியொன்றும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியமானது இலவச பண்ணிசை வகுப்பு, மிருதங்க வகுப்பு, பரதநாட்டிய வகுப்பு என்பனவும் நடாத்தி வருகின்றது.

மக்கள் தேவைகள் தொடர்பாக எமது நிதியத்துடன் தொடர்பு கொண்டால் மேலும் உதவிகள் வழங்கக் காத்திருக்கின்றது வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான அறக்கொடை நிதியம்.

**வே.சிவஸ்ரீ.சிவ.கமல்ராஜ் குருக்கள்,**
**பிரதமகுரு,**
**வண்ணை வீரமாகாளி அம்மன்**
**தேவஸ்தான ஸ்தாபகர்,**
**சுப்பிரமணியம் அறக்கொடை நிதியம்**

# கிழக்குப் பல்கலைக்கழக வேந்தராக யோகா இராசநாயகம் நியமனம்

(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தராக கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியை யோகா இராசநாயகம் உடன் செயற்படும் வண்ணம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தின் கேம்பிறிஜ்ட் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட இவர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரபலமான விருதுகள் பலவற்றைப் பெற்றுக் கொண்டவர்.

இவை தவிர தேசிய, சர்வதேச ரீதியில் செயற்படும் அமைப்புகளில் அங்கத்தவராக செயற்பட்டுள்ளார். இவர் உயர் கல்விப் பணியில் அடைந்த அளவிட முடியாத வெற்றிகளைக் கௌரவித்து கொழும்பு பல்கலைக் கழகம் 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் இவருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டமளித்து கௌரவித்தது. (ஸ்ரீ-4)

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் அமைச்சர்கள் இரகசியச் சந்திப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் அரசின் முக்கிய அமைச்சர்கள் சிலர் புதிய கட்சி ஒன்று அமைப்பது தொடர்பில் இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர் எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீண்டும் அரசியலில் ஈடுபட நாட்டம் கொண்டுள்ளமை காரணமாக அவர் ஒரு புதிய கட்சியின் ஊடாகத் தனது அரசியல் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளார்.

இது தொடர்பில் அண்மையில் அவரது தலைமையில் முக்கிய கூட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது. இந்தக் கூட்டத்தில் முக்கிய அமைச்சர்கள் மற்றும் அரசுக்கு நெருக்கமானவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் பங்கேற்று புதிய கட்சி தொடர்பில் ஆராய்ந்தனர் என மேலும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# ஜெயலலிதா ஒருவரால் மட்டும்தான் மூவரின் உயிரையும் காப்பாற்ற முடியும்

## நடிகர் சத்தியராஜ் தெரிவிப்பு

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட பேரறிவாளன், சாந்தன் , முருகன் ஆகியோருக்கு தூக்குத் தண்டனை விதிப்பதற்கு பல்வேறு தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். 3 பேரின் தூக்குத் தண்டனையை இரத்து செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றில் சட்டத்தரணிகள் கயல்விழி, அங்கயற்கன்னி, வடிவாம்பாள் ஆகியோர் கோயம்பேடு பஸ் நிலையம் அருகே நேற்று 3 ஆவது நாளாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள்.

அவர்களுடன் முத்துக்குமார் ஆவணப் படத்தின் உதவி இயக்குனர் மகேந்திரவர்மா மற்றும் அகிலா, தமிழரசி ஆகியோரும் நேற்று உண்ணாவிரதத்தை தொடங்கினார்கள். பேரறிவாளனின் தாயார் அற்புதம் அம்மாளும் உண்ணாவிரத பந்தலில் அமர்ந்து இருந்தார். நடிகர் சத்தியராஜ் , இயக்குநர்கள் மணிவண்ணன், அமீர் ஆகியோர் நேற்று காலை உண்ணாவிரதம் இருப்பவர்களை வாழ்த்தினர்.

இதன்போது உண்ணாவிரதப் மேடையில் சத்தியராஜ் கூறியதாவது,

மகாத்மாகாந்தி மற்றும் மனிதநேய ஆர்வலர்கள் அனைவரும் மரண தண்டனை தேவையில்லை என்று கூறியுள்ளனர். இந்த தண்டனை வேண்டுமா? வேண்டாமா? என்கிற விவாதம் ஒரு பக்கம் நடந்து கொண்டு இருக்கிறது. ஆனால் எந்த குற்றமும் செய்யாமல் தூக்கு மேடை ஏறக் காத்திருக்கும் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோருக்கு தூர்க்கு தண்டனை விதித்துள்ளது நியாயமா? என்கிற கேள்வி எழுந்துள்ளது.

20 ஆண்டுகளாக சிறை வாழ்க்கையை அவர்கள் அனுபவித்துள்ளனர். மேலும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, இலங்கை ஜனாதிபதி ராஜபக்சவுக்கு எதிராக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியதன் மூலம் உலக தமிழர்களின் வரவேற்பை பெற்று உள்ளார். அவர் ஒருவரால் மட்டும் தான் 3 பேரின் உயிரையும் காப்பாற்ற முடியும் நிலை உள்ளது. எனவே அவர் அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். (ஸ்ரீ-2)







ஏஏஏ மூவிஸின் பனைமரக்காடு இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வும் குறும்படங்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் வீரச[illegible]கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸகரலியத்த மங்க[illegible] விளக்கேற்றுவதையும் விருது வழங்கப்படுவதையும் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.






துணுக்காய்பிரதேசத்தில் பேருந்து நிலையமும், சந்தையும் திறப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பொதுச்சந்தையின் பெயர்பலகையை திரை நீக்கம் செய்துவைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில், காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# உள்நாட்டு ரீதியான தீர்வுத்திட்டமொன்றே நாட்டில் அமுல்படுத்தப்பட வேண்டும்

## இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்நாட்டு ரீதியான தீர்வுத் திட்டமொன்றை நாட்டில் அமுல்படுத்தப்பட வேண்டுமென இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

உலகின் ஏனைய அனைவரை விடவும் இலங்கை மக்களின் தேவைகளை அரசாங்கம் அறிந்து வைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பெங்களூரில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகம் தலையீடு செய்வதற்கு உசிதமான காலம் இதுவல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டு வரும் அநேகமான குற்றச்சாட்டுக்கள் தொலைக்காட்சி விவரணங்களாகவும் அறிக்கைகளாகவும் அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இவற்றை சரியான முறையில் உறுதிப்படுத்த முடியவில்லை என அவர் குறிப்பட்டுள்ளார்.

வடக்கு மக்களின் நல்வாழ்விற்காக பெரும்பான்மையான புலம்பெயர் மக்கள் உதவிகளை வழங்கி வருவதாகவும் மேற்குலக நாடுகளிலும் தமிழகத்தில் வாழும் சில புலம்பெயர் தமிழர்கள் ஒத்துழைப்பு வழங்குவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னரான நிலைமைகளை பயன்படுத்தி மக்களுக்கு சுபீட்சமான எதிர்காலத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதமளவில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையில் முதன்முறையாக பெண் சட்டமா அதிபர்

(கொழும்பு)

இலங்கையில் முதற்தடவையாக பெண் ஒருவர் சட்டமா அதிபராக பதவியேற்கவுள்ளார். இந்த நிலையில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சாந்தி ஏவா வனசுந்தரவே புதிய சட்டமா அதிபராக பதவியேற்கவுள்ளார்.

அடுத்த மாதம் முதல் அவர் இலங்கையின் சட்டமா அதிபராக பதவியேற்கவுள்ளார். இதனையடுத்து சொலிஸிட்டர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ நியமிக்கப்படவுள்ளார்.

இதற்கிடையில் பதவியில் இருந்து இளைப்பாறும் மொஹான் பீரிஸ் அமைச்சரவையின் சிரேஷ்ட ஆலோசகராக நியமிக்கப்படவுள்ளார்.

ஏற்கனவே முதன்முறையாக பிரதம நீதியரசராக சிராணி பண்டாரநாயக்க நியமிக் கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# வடக்கு-கிழக்கு மாகாணங்கள் உட்பட நாடு முழுவதும் கடற்படை முகாம்கள்

## கடற்படைத்தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு உட்பட நாடு முழுவதும் கடற்படை முகாம்கள் அமைக்கப்படவுள்ளன என கடற்படைத் தளபதியான வைஸ் அட்மிரல் டீ.டபிள்யு.ஏ.எஸ். திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் ஏற்படாதவாறு பாதுகாத்துக் கொள்ளும் ஒரு முன்னேற்பாடே இது எனவும் சட்ட விரோதமாக ஆட்கள் மற்றும் போதைப் பொருட்கள் ஜெலிக்னைட் போன்றன கடல் மார்க்கமாகக் கடத்தப்படுவதனை தடுப்பதற்கும் இந்த நடவடிக்கை உதவும் எனவும் குறிப்பிட்டார்.

இதன்படி முதல் கட்டமாக விரைவில் முல்லைத்தீவு, முள்ளிக்குளம், பாணமை போன்ற பிரதேசங்களில் கடற்படை முகாம்கள் அமைக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2-4)

# வியட்நாம் மற்றும் இலங்கைக்கு இடையில் இருதரப்பு வர்த்தகம்

(கொழும்பு)

வியட்நாம் மற்றும் இலங்கைக்கு இடையிலான இரு தரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளை மேம்படுத்த இரு நாடுகளும் இணைந்து செயற்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற வர்த்தக சமூக ஒன்றுகூடல் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றி வியட்நாம் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதற்கு ஏற்றவாறு இரு நாடுகளுக்கும் இடையே நேரடி விமானச் சேவை ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதன்மூலம் தற்போது 9 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான வர்த்தகத்தை எதிர்வரும் 2015 ஆம் ஆண்டளவில் 30 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரிக்க முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பூநொச்சிக்குளத்தில் புதிய பாட்சாலை நிர்மாணிக்க 42 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள பூநொச்சிக்குளம் கிராமத்தில் புதிய பாடசாலை நிர்மாணிப்பதற்கும் அதனுடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் 42 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இதற்கான ஆரம்பக்கட்ட பணிகளை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் தொடக்கி வைத்தார்.

வன்னி மாவட்டத்தில் மீள்குடியேறும் கிராமங்களில் கல்வி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. பாடசாலைகளிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப அடிப்படை வசதிகளை மேம்படுத்த போதுமான நிதியினை மத்திய அரசாங்கத்தின் மூலம் ஒதுக்கீடு செய்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் தெரிவித்தார். (ஸ்ரீ-4-2)

# அக்ரஹார காப்புறுதிக்கு இலத்திரனியல் அட்டைகளை அறிமுகப்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கும் ஊடகவியலாளர்களுக்குமான அக்ரஹார காப்புறுதிக்கு இலத்திரனியல் அட்டைகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை அரச ஊழியர்கள் அக்ரஹர முறைமையின் கீழ் வைத்திய சிகிச்சைகள் பெற்றுக் கொள்ளும் கட்டணஅடிப்படையில் அவர்களால் செலுத்தப்பட்டதன் பின்னர் கட்டணப் பட்டியலுக்கான தொகை செலுத்தப்பட்டு வந்தது.

இந்த நடைமுறையினை பின்பற்றி காப்புறுதி தொகையினை பெற்றுக் கொள்வதற்கு நீண்ட நாட்கள் செலவிட நேரிடுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதிய திட்டத்தின் கீழ் இலத்திரனியல் அட்டைகளை வைத்தியசாலைகளில் கொடுத்து சிகிச்சைகளை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்குமென தேசிய காப்புறுதி நிதியம் குறிப்பிடுகின்றது.

30 மில்லியனுக்கும் அதிகமான அரச ஊழியர்களுக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் நன்மை பெற்றுக் கொள்ள முடியும் என நிதியத்தின் தலைவர் சேனக்க அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)




# சமயத் தலைவர்களே! பொறுப்பு உங்களுக்கும்!

சமயம் என்பது வாழ்க்கை முறையாகும். மக்கள் சீராக வாழ்வதற்காகவே சமயங்கள் தமது கடமையை ஆற்றுகின்றன.

மக்களின் வாழ்வாதாரத்தில் எங்கெங்கு எவ்வெப் பிரச்சினை ஏற்பட்டாலும் சமயப் பொறுப்பாளிகள், தலைவர்கள்-முன்னின்று மக்களோடு மக்களாக சமரச முயற்சிகளாகவோ அல்லது நீதியை நிறுத்தவதற்காகவோ உழைப்பது காலத்தின் தேவையாகும்.


தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அரசியல், நிர்வாக, சமூக, பொருளாதார நிகழ்வுகளோடு சமயம் அந்நியோன்னியமாகச் சரிசமனாக கலந்தே இயங்க வேண்டிய தேவையை எமது மண் ஏற்படுத்தித் தந்திருக்கின்றது.

இந்நிலையில் சமூகத்தின் தேவைகளில் ஆசிகளை வழங்குவதில் முன்னிற்கும் மதிப்பார்ந்த வணக்கத்துக்குரிய எமது சமயத் தலைவர்கள் சமூக, பொது அமைப்புக்கள் ஆகியன,

மர்ம மனிதன்,ஆலய வேள்விகள்,சிறுமிகள் கொலை,மாணவர் கடத்தல்,ரிசானாவின் விடுதலை,நாவாந்துறை மோதல்கள் தொடர்பில் முயற்சிகள் யாதும் எடுத்ததாக யாமறியோம்.

ஆசிகளுக்கு இறைவன் இருக்கின்றான். இனியாவது மக்கள் துன்பத்தில் பங்குகொண்டு தமிழர்களின் இன்னல்களைத் துடைப்பீர்களா?

திருவாதவூரன், யாழ்ப்பாணம்



தேசத்தின் அபிமானம் அமைப்பின் ஏற்பாட்டில் 2011 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம், சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சிறிசேன ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

## தடுப்பிலுள்ள அனைத்து சந்தேகநபர்களையும் நீதிமன்றில் முன்னிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம்

### பொலிஸ் தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து சந்தேக நபர்களையும் நீதிமன்றில் ஆஜர் செய்ய வேண்டுமென பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆறு ஆண்டுகள் தொடர்ச்சியாக அமுல் படுத்தப்பட்டு வந்த அவசரகாலச் சட்டத்தை இரத்து செய்ததன்மூலம் தடுப்புக்காவல் உத்தரவு அடிப்படையில் தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்டு வந்த அனைத்து சந்தேக நபர்களையும் நீதிமன்றில் ஆஜர் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதன்படி பயங்கரவாத குற்றச்சாட்டுக்கள் உள்ளிட்ட பாரிய குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் எதிர்வரும் நாட்களில் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட உள்ளனர்.

பயங்கரவாத தடுப்புப் பிரிவு மற்றும் புலனாய்வு பிரிவு ஆகியவற்றினால் கைது செய்யப்பட்ட பலர் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## புலிகளை தடை செய்ய இலங்கை விடுத்த கோரிக்கைக்கு ஐரோ.ஒன்றியம் இதுவரை பதில்லை

(கொழும்பு)

ஐரோப்பாவில் இயங்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னணி அமைப்புகளை பயங்கரவாத பட்டியலில் இணைக்க வேண்டும் என்ற இலங்கையின் கோரிக்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் இதுவரை பதில் வழங்கவில்லை.

இதனை இலங்கையின் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான தூதுவர் ரவீந்திர ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு இன்னமும் வெளிநாடுகளில் முன்னணி அமைப்பாக செயற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தமது கோரிக்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் விரைவில் பதிலளிக்கும் என்று தாம் எதிர்பார்ப்பதாக ஆரியசிங்க குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தடை செய்யப்படும் அதேநேரம் அதன் கிளை அமைப்புகளும் தடை செய்யப்பட வேண்டும் என்பதே இலங்கையின் கோரிக்கை என்று அவர் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுத ரீதியாக தோற்கடிக்கப்பட்டுள்ளனர். எனினும் முன்னணி அமைப்புகளாக அவை வெளிநாடுகளில் செயற்பட்டு வருகின்றன.

தமிழர்புனர்வாழ்வுக்கழகம், தமிழ் இணைப்புக்குழு மற்றும் தமிழ் இளைஞர் குழு போன்றவற்றையே தடைசெய்யுமாறு இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது. (ஸ்ரீ-2)

## கிறிஸ் பூதத்தின் பின்னணியில் புலிகளின் சர்வதேச வலையமைப்பாம்

### திவயின தெரிவிப்பு

(கொழும்பு)

கிறிஸ் பூதம் தொடர்பான சர்ச்சையின் பின்னணியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு செயற்பட்டு வருவதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் சுற்றுலா கைத்தொழிலுக்கு பங்கம் ஏற்படுத்தும் நோக்கில் கிறிஸ் பூத வதந்திகள் பரப்பப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

சுற்றுலாப் பயணிகளின் வருகை 36 வீதமாக உயர்வடைந்துள்ள காரணத்தினால் தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பு இந்த சதித் திட்டத்தை தீட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடா மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த புலி ஆதரவாளர்கள் சுற்றுலாப் பயணிகளைப் போன்று வடக்கு- கிழக்கிற்கு சென்று கிறிஸ் பூதம் தொடர்பான பிரசாரங்களை மேற்கொண்டுள்ளனர்.

புலம்பெயர் தமிழ் மக்களின் இந்த நாசவேலை குறித்து பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர உயர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

பிரிட்டன் தமிழ் பேரவை மற்றும் கனேடிய புலிகளின் அமைப்பு ஆகியன இணைந்து இந்தப் போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## வடமத்திய மாகாண மக்களிடையே பரவிவரும் ஒருவித சருமநோய்

(கொழும்பு)

லிஷ்மானியா என்கிற ஒருவகை ஒட்டுண்ணி உடம்பிற்குள் பிரவேசிப்பதனால் லிஷ்மனைசீஸ் சரும நோய் பரவுவதாக பொலநறுவை பொது வைத்தியசாலையின் சரும நோய்க்கான விசேட நிபுணர் இந்திரா கஹவிட குறிப்பிட்டார்.

உடம்பின் சில பகுதிகளில் ஏற்படும் வலி, அரிப்பு, குணமடையாத சிவப்பு நிற புருக்கள் ஆகியன இந்த நோய்க்கான அறிகுறிகள் எனவும் அவர் கூறினார்.

வீட்டிற்கு உள்ளும் வெளியிலும் இரவு வேளைகளில் காணக்கூடியதாக உள்ள இந்த எறும்புக்கடியில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக நுளம்பு வலைகளை உபயோகித்தல், வீட்டுத் திண்ணையில் உறங்குவதைத் தவிர்த்தல் மற்றும் நுளம்பு சுருள்களை உபயோகித்தல் போன்ற முறைகளை பின்பற்ற வேண்டுமெனவும் விசேட நிபுணர் தெரிவித்துள்ளார்.

இந்த சருமநோய் தொற்றுக்குள்ளானவர்கள் உரிய சிகிச்சை பெற்றுக் கொள்ளாத பட்சத்தில் மரணம் ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளதாகவும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

## கிளிநொச்சியிலுள்ள பாடசாலைகளின் அபிவிருத்திக்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

கிளிநொச்சியிலுள்ள 13 பாடசாலைகளின் வகுப்பறைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் கொரிய கல்வி நிதியம் (கொய்கா) 500 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் கல்வி அமைச்சில் அமைச்சர் பந்துல குணவர்த்தன முன்னிலையில் கைச்சாத்தானது.

கொய்கா நிறுவனத்தின் வதிவிட பிரதிநிதி வோ.சென்.வூ.மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர்.எச்.எம்.குணசேகர ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 13 பாடசாலைகளிலும் புதிதாக 105 வகுப்பறைகள், 13 பாடசாலை அலுவலகங்கள் மற்றும் 12 ஆசிரியர் தங்குமிட அறைகள் போன்றவை கட்டப்படவுள்ளன.

கிளிநொச்சியில் புனித தெரேசா மகளிர் கல்லூரி, சிவநகர் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை, பாரதி வித்தியாலயம், அக்கராயன் தமிழ் கலவன் பாடசாலை, இராமநாதபுரம் மகா வித்தியாலயம், வட்டக்கச்சி மகா வித்தியாலயம், இராமநாதபுரம் மேற்கு தமிழ் கலவன் பாடசாலை என்பவற்றிலும் கண்டாவளையில் பிரமந்தனாறு மகா வித்தியாலயம், தர்மபுரம் மகா வித்தியாலயம், முருகானந்தா மகா வித்தியாலயம் என்பவற்றிலும் பூநகரியில் வேரவில் இந்து மகா வித்தியாலயம், இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலை, கிரான்சி அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை என்பவற்றிலும் புதிய வகுப்பறைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன. (ஸ்ரீ-2)

## அமெரிக்காவிலுள்ள இலங்கையர்களுக்கு உதவ இலங்கைத் தூதரகம் நடவடிக்கை

அமெரிக்காவிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள இரேன் சூறாவளியினைத் தொடர்ந்து அங்குள்ள இலங்கையர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய 24 மணிநேர அவசர தொலைபேசி சேவையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியவின் ஆலோசனைக்கு அமைய இந்த அவசர தொலைபேசி சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தூதுவராலயம் விடுத்துள்ள அறிக்கையில் 2023520355 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இலங்கையில் உள்ளவர்கள் அமெரிக்காவில் உள்ள இலங்கை தூதுவராலயத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

இதன்மூலம் அமெரிக்காவில் உள்ள தமது உறவினர்கள் குறித்த தகவல்களை உடனடியாக பெற்றுக் கொள்ள முடியும் என அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள இந்தச் சூறாவளியானது அமெரிக்காவின் கிழக்குக் கரையோர பிரதேசத்தின் ஊடாக மணிக்கு 150 கிலோமீற்றர் வேகத்தில் சென்று கொண்டிருப்பதாக வெளிநாட்டு வானிலை நிலையங்கள் தெரிவித்துள்ளன.

இந்த இயற்கை அனர்த்தம் காரணமாக இதுவரை சுமார் 20 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கின்றன.

இதனிடையே இந்தச் சூறாவளி காரணமாக மேலும் ஆறு பிராந்தியங்கள் அபாய வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் குறித்த வலயங்களில் இருந்தும் மக்களை மிக விரைவில் வெளியேறும்படி அவதான நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (ஸ்ரீ-2)

# சாவின் மடியில் கிடப்பவனாகக் கேட்கின்றேன்

# தூக்குத் தண்டனைக்கு எதிராக குரல் கொடுங்கள்




அம்மா மிகுந்த அறிவும் ஆய்ந்தறிவும் போராற்றலும் கொண்டவர் நீங்கள். இந்த வழக்கில் இருக்கும் குளறுபடிகளை நீங்கள் நிச்சயம் அறிவீர்கள். என்ன தவறு செய்தோம் என்றே தெரியாமல் சாவின் மடியில் கிடப்பவனாகக் கேட்கிறேன்... தயவு செய்து தூக்குத் தண்டனைக்கு எதிராகத் குரல் கொடுங்கள். இத்தனை வருடங்களாக வாடும் எங்களுக்காக உங்களின் ஒற்றைக் குரல் ஒலித்தால் போதும்! கடந்த ஜூனியர் விகடன் இதழ் மூலமாக முதல்வர் ஜெயலலிதாவிடம் பேரறிவாளன் வைத்திருந்த கண்ணீர்க் கோரிக்கை இது. ஆனால் இந்தக் கண்ணீர் இன்னமும் அரசுத் தரப்பை அசைக்கவில்லை என்பதுதான் துயரம்!

ஆம், நடக்கக் கூடாது என நினைத்தது நடந்தேவிட்டது. ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனைக்கு ஆளாகி வேலூர் சிறையில் உள்ள பேரறிவாளன், முருகன், சாந்தன் மூவருடைய கருணை மனுக்களும் சமீபத்தில் குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்டன. இதையடுத்து மூவருக்கும் தூக்கு வேளை நெருங்கிவிட்டதாகப் பரபரப்புப் கிளம்ப, தமிழகம் முழுக்க உருக்கமான கோரிக்கைப் போராட்டங்கள் நடந்தன. இலங்கையின் போர்க் குற்றங்களைக் கண்டித்து தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றிய முதல்வர் ஜெயலலிதாவை நோக்கி கண்ணீர்க் கரங்கள் நீண்டன.

சட்டமன்றக்

## ஜெயலலிதாவிடம் பேரறிவாளன் விடுத்த கண்ணீர்க் கோரிக்கை

கூட்டத் தொடர் நடக்கும் இந்த நேரத்தில் தூக்குத் தண்டனைக்கு எதிரான சட்ட வடிவத்தை ஜெயலலிதா இயற்றுவார் என்கிற எதிர்பார்ப்பும் நிலவியது.

ஆனால் அந்த நம்பிக்கையை தகர்க்கும் விதமாக, சிறைத் துறைக்கு கடிதம் ஒன்றை அனுப்பி அதிரவைத்திருக்கிறது தமிழக அரசு. கடந்த 25ஆம் திகதி மாலை உள்துறைச் செயலாளர் ரமேஷ்ராம் மிஸ்ரா மூலமாக வேலூர் சிறைக் கண்காணிப்பாளருக்கு தந்தியில் அனுப்பப்பட்ட அந்தக் கடிதத்தில் "நடவடிக்கை எடுப்பதற்கான கடிதத்தை இத்துடன் இணைந்துள்ளேன். நடவடிக்கை எடுத்த பின் உடனடியாக அரசுக்கு அறிக்கை அனுப்பவும்" என மிகச் சுருக்கமான முறையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

மூவருடைய தூக்குத் தண்டனைக்கு எதிராக நிச்சயம் தமிழக அரசு குரல் கொடுக்கும் என உறுதியாகப் பலரும் நம்பி இருந்த வேளையில், அதிர்ச்சிகரமான இந்த முடிபு எப்படி எடுக்கப்பட்டது?

இது குறித்துப் பேசும் அர சுத் துறையில் உள்ள உணர்வாளர்கள். "கருணை மனு" நிராகரிக்கப்பட்ட கடிதம். கடந்த 16ஆம் திகதி தமிழக அரசுக்கு வந்துவிட்டது. உடனே அரசுத் துறை செயலாளர்கள் அந்தக் கடிதம் குறித்து ஆலோசனை நடத்தி, முதல்வரிடம் தகவல் சொன்னார்கள். கூட்டத் தொடர் நடக்கும் இந்த நேரத்தில் இது குறித்து எந்த முடிபு எடுப்பதும் சரியில்லை. அதனால் கூட்டத் தொடர் முடிந்த பின்னர் இதுபற்றிப் பேசலாம்! என்றார் முதல்வர். அதனால் இப் போதைக்கு இந்த விவகாரத்தில் பயப்பட வேண்டியது இல்லை என்கிற நிலை நிலவியது. இதற்கிடையில், கிருஷ்ணசாமி, சரத்குமார், ஜவாஹிருல்லா, தனியரசு உள்ளிட்ட எம்.எல்.ஏ-க்கள் பலரும் இந்த விவகாரம் குறித்து முதல்வரிடம் பேச முயற்சித்தார்கள். சீமான் மூலமாகவும் முதல்வருக்கு உருக்கமான கோரிக்கை வைக்க முடிவானது. முதல்வரை நேரடியாக சந்தித்து கோரிக்கை வைப்போம் என எம்.ஜி.ஆர். நகர் கூட்டத்தில் நெடுமாறன் பகிரங்கமாகவே அறிவித்தார். ஆனால் இதற்கிடையில் எங்கிருந்து உத்தரவு வந்ததோ... அரசுத் தரப்பு அதிகாரிகள் 25ஆம் திகதி காலையில் இருந்தே பரபரப்பாக இந்த விவகாரம் குறித்துப் பேசத் தொடங்கினார்கள். முதல்வரின் பார்வைக்கு வைக்கப்பட்டு இருந்த கருணை மனு நிராகரிக்கப்பட்ட பைல் முதன்மைச் செயலாளர் சாரங்கியின் மேசைக்குத் கொண்டுவரப்பட்டது.

இதில் நாம் ஒன்றும் செய்ய முடியாது. உடனே மத்திய அரசின் கடிதத்தை சிறைத் துறைக்கு அனுப்பிவிடுங்கள் எனச் சொல்லிவிட்டாராம் சாரங்கி. அரசு உத்தரவு வந்த ஏழு நாட்களுக்குள் தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவோம் என சிறைத்துறை அதிகாரி டோக்ரோ ஏற்கெனவே அறிவித்திருக்கும் நிலையில் அரசுத் தரப்பின் இந்த வேகம் அனைவருக்குமே அதிர்ச்சி அளித்திருக்கிறது. 26ஆம் திகதி காலையில் கடிதம் சிறைத்துறைக்குக் கிடைக்க, அடுத்த ஏழு தினங்களுக்குள் மூன்று பேருக்கும் தூக்குத் தண்டனையை அதிகாரிகள் நிறைவேற்றக் கூடும். இந்த விவகாரத்தில் மத்திய அரசுக்கு எதிராக செயல்படாவிட்டாலும் அந்தக் கடிதத்தைக் கிடப்பில் போட்டு வைக்கலாம் என்பதுதான் முதல்வரின் எண்ணமாக இருந்தது. ஆனால் அதிகாரிகள் தரப்பில் சிலர் திட்ட மிட்டு மத்திய அரசின் பெயரைச் சொல்லி இந்த விவகாரத்தை விரைவு படுத்திவிட்டார்கள். முதல்வர் நல்லது செய்ய நினைத்தும் அதிகாரிகள் சிலரால் நிலைமை கைமீறிப் போய்விட்டது. தமிழக அரசு கைவிரித்து விட்ட நிலையில் முறைப்படியான சட்டப் போராட்டங்களால் மட்டுமே மூவருக்குமான தூக்குத்தண்டனையை தடுக்க முடியும். ஐந்து நாட்களுக்குள் சட்ட ரீதியான தடை உத்தரவை நீதிமன்றில் பெற முடியாமல் போனால்... மூவருக்கும் எந்த நேரத்திலும் தூக்குத் கயிறு விழும்!" என்கிறார்கள் ஆதங்கமாக.

அரசுத் தரப்பில் பேசும் அதிகாரிகளே, "கொலையானவர் முன்னாள் பிரதமர் என்கிற நிலையில் ஒரு மாநில அரசால் இந்த விவகாரத்தில் எது வும் செய்ய முடியாது. கொலையாளியை நியாயப்படுத்தும் செயல்பாடாகக் கருதப்படலாம் என்பதற்காகவே முறைப்படி கடிதம் சிறைத் துறைக்கு அனுப்பப்பட்டது" என்கிறார்கள்.

இதற்கிடையில் சீமான் மூலமாக தூக்குத் தண்டனைக்கு தடை விதிக்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் பேரறிவாளன், முருகன், சாந்தன் மூவரின் சார்பில் பிரபல வழக்கறிஞர் ராம்ஜெத்மலானியை களம் இறக்கும் வேலைகள் தீவிரமாக நடக்கின்றன. வைகோ, நெடுமாறன் உள்ளிட்ட உணர்

**ஜூனியர் விகடன்**

வாளர்கள் பலரும் ஒன்றுகூடி சட்டப் போராட்டம் நடத்தவும் தீவிர வேலைகள் நடக்கின்றன. தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பல விவகாரங்களில் நீதிமன்றம் மூலமாக தடை வாங்கிய பல தீர்ப்புகளை முன் உதாரணமாக வைத்து மூவருடைய உயிர்களையும் காப்பாற்ற முடியும் என்று உறுதியாக நம்புகிறார்கள். கைவிடப்பட்ட இந்த மூவரின் உயிரை அடுத்தடுத்த சட்டப் போராட்டங்களாவது மீட்டுக் கொடுக்குமா? கண்ணீரோடு காத்திருக்கிறார்கள் கவலைப் பட மட்டுமே தெரிந்த தமிழர்கள்!

இரா.சரவணன்

# சரணடைய சென்றோர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்படவில்லை

## சிங்கள ஊடகத்துக்கு தமிழ்ச்செல்வனின் மனைவி செவ்வி

இறுதிக்கட்ட போரின் போது வெள்ளைக் கொடி ஏந்தி சரணடையச் சென்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்கள் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள், முற்றிலும் பொய்யானவை என ரிவிர பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனின் மனைவி சசிரேகா தமிழ்ச் செல்வன், ரிவிர பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வெள்ளமுள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் சிக்கியிருந்த சசிரேகா கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் ஏனைய பொது மக்களுடன் இணைந்து அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு தப்பிச் சென்றதாகச் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர் தமிழ் மக்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரங்களினால் தமிழ் மக்களே பாதிக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# அவசரகால சட்டம் நீக்கம் குறித்தும் ஆணைக்குழு அறிக்கையில் உள்ளடக்கம்

(கொழும்பு)

அவசரகாலச் சட்ட நீக்கம் தொடர்பான யோசனை கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்படும் என தெரிவிக்கப் படுகிறது.

ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் இந்த விடயம் உள்ளடக்கப்படும் என அதன் தலைவர் சீ.ஆர்.டி. சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நல்லிணக்க ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆணைக்குழுவிற்கு கிடைத்த சாட்சியங்களில் முக்கியமானவை மட்டும் இறுதி அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

இந்த அறிக்கை மிகவும் பாரிய அறிக்கையாக அமையும் எனவும் அவர் தெரிவித்திருந்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி அளவில் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# மற்றொரு கோணம்



## மனிதன் மனிதத் தன்மையோடு வாழ்வதுதான் முதற்படி.., தெய்வீகம் அடுத்தபடி

கொடூரபுத்தி, ஆவேசம், உணர்ச்சி வயப்படாமல் நிகழும் அழிவு குற்றச் செயல்களுக்குச் சட்டத்தில் அதிகபட்ச தண்டனை மரண தண்டனை. அம்மனிதனின் குற்றத்திற்கான சட்ட அளவு கோல். இதுவே சரியான நிலைப்பாடா? மரண தண்டனை பற்றியான உங்கள் மதிப்பீடு என்ன?

யாருக்கும் யாருடைய உயிரையும் எடுப்பதற்கு அனுமதி இல்லைதான். ஆனால், மரண தண்டனை என்பதை சமூகம் ஒரு தண்டனையாக வைத்

**ஆன்மீகம் 25**

திருப்பதாக நான் கருதவில்லை. அதை ஒரு தடுப்பு முறையாகத் தான்வைத்திருக்கிறது. நம் நாட்டில் மரண தண்டனையை அவ்வளவு எளிதாக நிறையவேற்றிவிட முடியாது. ஒன்று வேண்டுமா, வேண்டாமா என்று விவாதிப்பது எளிது. ஆனால், மிகக் கொடூரமான குற்றங்கள் நமக்கு நெருக்கமானவர்களுக்கு நடக்கிற போதும், சின்னஞ்சிறு குழந்தைகள் வன் முறைக்கு ஆளாகும் போதும், பாதிக்கப்பட்டவர்களிடத்தில் மரண தண்டனையின் நியாய அநியாயங்களைப் பற்றிப் பேச முடியாது.


உயிர் வாழ்கிற உரிமை குற்றவாளிக்கு மட்டுமில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கும் உண்டு. சமூகம் மேம்பாடு கண்டு பக்குவப்படும் போது, உரிய ஆன்மீக விழிப்புணர்வு ஏற்படும் போது இத்தகைய குற்றங்கள் நடைபெறாமல் இருக்கும். எனவே அப்படியொரு சமூகஒழுங்கை உருவாக்காமல் தண்டனைகளை நீக்க வேண்டும் என்று நினைப்பது சரியில்லை.

மனித மனம் எல்லா வகையிலும் பண்பட்டு மேன்மையுற்றால் கடவுள் என்கிற உருவகம் காணாமல் போகுமா?

கடவுள் பற்றி எண்ணமோ பயமோ இல்லாமல் மனிதத் தன்மையின் அடிப்படையிலேயே மனித நேயத்தை வெளிப்படுத்தி மனிதனாக வாழ முடியுமானால் அது நல்ல விடயம். அப்படி வாழுகிற மனிதனுக்குள் தெய்வீகம் என்பது தானாகவே நிகழும். மனிதன் மனிதத் தன்மையோடு வாழ்வது தான் முதல் படி. தெய்வீகம் என்பது அடுத்தபடி. ஆனால் முதல்படி எடுத்து வைக்காமலேயே இரண்டாவது படியை நோக்கி மனிதர்கள் போனதால் தான் இத்தனை குழப்பங்களும் ஏற்பட்டன. கடவுள் பெயரால் தேவையில்லாத அநியாயங்கள் நடந்து விட்டன. கடவுளின் பெயரால் மனித உயிர்களை எடுப்பதே, தான் மனிதன் என்பதை உணராததால் தான்.

கடவுள் தன்மை பற்றிப் பேசிய பலரும் மனிதத் தன்மையைக்கூட உணராமல் பல மிருகத்தனங்களை அரங்கேற்றினார்கள். எனவே சமூகம் மனிதத் தன்மையோடு நடந்து கொண்டால் தெய்வீகம் தானாகவே நிகழும். கடவுள் பற்றிய எண்ணமோ, அச்சமோ இல்லாமல் அப்படியொரு சூழ்நிலை வருமென்றால் அது நிச்சயமாக நல்லது தான்.

முன்பெல்லாம் வீட்டிலுள்ள பெரியோர்களின் பேச்சை, அறிவுரைகளை கேட்டு நடந்தார்கள் இளைஞர்கள். இக்காலத்தில்



அப்படி யாரும் கேட்பதில்லையே ஏன்?

தாங்கள் சொல்வதை மற்றவர்கள் கேட்கவில்லையென்றால் பெரியவர்கள் தங்கள் தன்மை எப்படி இருக்கிறது என்று சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் புத்திமதி சொல்லி பத்துப் பேர் கேட்கவில்லையென்றால், நீங்கள் பொறுப்பாகவும் புத்திசாலித்தனமாகவும் வாழ வில்லையென்று அர்த்தம். மற்றவர்களின் மனதில் குறிப்பாக, இளைஞர்கள் மத்தியில் ஒரு தாக்கத்தை எற்படுத்தும் விதமாக உங்கள் வாழ்க்கை இருந்தால்தான், மற்றவர்கள் நீங்கள் சொல்வதைக் கேட்பார்கள்.

இல்லாவிட்டால் எதற்காக உங்கள் பேச்சை அவர்கள் கேட்க வேண்டும். அவர்களாவது தாமாக எதையேனும் வித்தியாசமாகச் செய்யட்டுமே.

ஹிப்நாடிசம் சாத்தியமா?

ஹிப்நாடிசம் என்கிற உளவியல் ரீதியான அம்சம் காலம்காலமாகவே இருந்து வருகிறது. அது சற்றுத் தீவிரமான ஆலோசனை நிலை. அவ்வளவுதான். உங்களை இன்று இரவு என்னோடு உணவு அருந்த வாருங்கள் என்று யாராவது அழைத்து நீங்கள் சென்றால் அது ஹிப்நாடிசம் தான். நீங்கள் வர விரும்பாத நிலையிலும் ஒருவர் அழைத்து நீங்கள் சென்றால் அதுகூட ஒருவிதமான ஹிப்நாடிசம் தான். எனவே ஹிப்நாடிசம் என்பது இல்லாத ஒன்று அல்ல. சொல்லப்போனால் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவர் வாழ்விலும் அது ஏதேனும் ஒரு விதத்தில் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

சிலரால் அதனை வலிமையோடு செய்ய முடிகிறது. ஆனால், ஒன்றை மறந்து விடாதீர்கள் உங்கள் விருப்பமில்லாமல் உங்கள் மனதளவில் நீங்கள் இசையாமல் யாராலும் உங்களை ஹிப்நாடிசம் செய்ய முடியாது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# புதுமைப்பித்தன்

## எதிரொலிச்சான் கோவில்களை தகர்க்கப் புறப்பட்ட கலகக்காரன்

**02**

ஒரு கலகக்குரல் எப்படி ஒரு எதிரொலிச்சான் கோவிலாக இருக்கும்? அதுவும் சமூகநோக்கு உள்ளடக்கம் சார்ந்த கலகக்குரல் எதை எதிரொலிக்கும். சித்தாந்த சனாதனிகளாக வாழ்ந்த சக எழுத்தாளர்களிடமிருந்து விலகி, மாறுபட்டு ஒரு கலக்காரனாக தன் எல்லா வகை எழுத்திலும் தன்னை வெளிப்படையாக அறிவித்துக் கொண்டவன் எப்படி எதிரொலிச்சான் கோவிலாக ஆக முடியும்? தன் கலாத்திய மதிப்பீடுகளையும் சித்தாந்த புனைவுகளையும் கட்டுடைத்து நொறுக்கி 'இப்படித்தானே நீ இருக்கிறாய், நாம் இருக்கிறோம்...' என உண்மை இது என்று பாசாங்குகள் ஏதுமின்றி, கருத்தில் ஏற்றதை, எழுத்திலும் காட்டி உடைத் தவன் கலகக்காரன் தானே!

"கற்பு கற்பு என்று கதைக்கிறீர்களே! இது தான் ஐயா, பொன்னகரம்" என முகத்தில் அறைபவனை, இந்த 2010 -இல் நின்று மதிப்பிட்டாலும், மறுவாசிப்புக்கு உள்ளாக்கினாலும் வேறு எப்படி அழைப்பது? உடை, நொறுக்கு, அழி புதிதாக எழுப்பு... இந்தக் கலக மரபு தொடர்ந்ததா? எங்கே தவறிவிட்டோம். என்பது தனி. இப்போது அதில் நுழையவில்லை எதிரொலிச்சான் கோவில்களாக ஆவதும், இருப்பதும், இயங்குவதும் பெருமைக்குரியதாக தொடரப்படுவதும், 'பஞ்சமும் நோயும் நின் மெய்யடியார்க்கோ? பாரினில் மேன்மைகள் வேறினியார்க்கோ" என மொழி, இன சிதைப்புச் சூழல் தொடர்வதும் ஒரு வகையில் எதிர் வினையைத் தோற்றுவிக்கலாம். புதுமைப்பித்தன்கள், புதுக்கலகக்காரர்கள் தோன்றலாம் கட்டுடைக்கலாம்.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

ஒரு எழுத்தாளனை மதிப்பிடல் என்பது தேவையா? எதன் பொருட்டுத் தேவை. இச்செயல் அவனை சிறுமைப்படுத்துமா? அல்லது தூக்கி நிறுத்துமா என்றெல்லாம் கூட நமக்குக் கருத்துக்களும், கருத்து மாறுபாடுகளும் உள்ளன. ஒரு மொழி சார்ந்த நாகரிக சமூகம் தன்னைச் சோதித்துக் கொள்ள பயன்படுத்தக் கூடிய பல பரிசோதனை ஆய்வுக் கருவிகளுக்குள் வெப்பமானியாக கலை, இலக்கிய வெளிப்பாடுகளைக் கருதலாம். ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டம் அதன் இலக்கியத் தரத்தை நிர்ணயிப்பதை வைத்து அளவீடு செய்யப்படுவதில்லை- முன்னேறுவதில்லை எனப்பட்டாலும், கலை, இலக்கியம் நேரடியாக எந்த வித சமூகமாற்றத்தையும், விடுதலையையும் கொண்டு வந்துவிடாது என்பது உண்மையானாலும், அது அடைபவர்களிடத்திலே ஏற்படுத்தக் கூடிய தாக்கம் எதிர் அல்லது உடன்போக்கு விளைவுகள் காரணமாக அடையப்பெற்ற மனம் விளைநிலமாக இருப்பின் எல்லாவித எதிர்க் காரணிகளையும் தகர்த்து உயிர்ப்புறும் விதையாக கலை, இலக்கியம் இருக்கும் என்ற அளவில் இடம்தர முடியும். ஒரு கலகக்காரக்கலை, இலக்கியவாதி சூழலைக்காட்டி உணர்த்திட, கட்டுடைக்கப் புறப்பட உயிர் நிலமாக, விதைகள் முளைக்க வைக்கும் தளமாக ஆவதும் இயல்புதான்.

இங்கு ஒரு எழுத்தாளனை நமக்குத் தெரிந்தவன்தானே எனும் மதர்ப்புடனோ பிரகாசத்துடனோ அணுகிப்பார்க்க முயல்கிறோம். அவனை எப்படி அடையாளப் படுத்திக் கொள்கிறோம். அர்த்தப் படுத்திக் கொள்கிறோம் எனப் பார்க்கையில்தான் நமக்கு முன்பாக எல்லாக் கோட்பாடுகளும் குதித்து வந்து முன்நிற்பதையும் காண்கிறோம்.

ஆனால், எந்தக் கருது கோள்களாலும் புதுமைப்பித்தனை ஒரு எதிராலிச்சான் கோவிலாகக் காணாது, கலகக்காரனாகக் காணச் செய்வது எது? அதைத் தேட வேண்டியதும் இன்றைய தேவை.

**பாரவி-தமிழ்நாடு**

ஒரு எழுத்தாளனை எழுத்தாளனாக ஏற்றுக்கொள்ளச் செய்வது தான் எது எனப்பார்ப்பதும் பயில்வதும், உணர்ந்ததை அடுத்துவரும் தளத்திற்கு மாற்றுவதும் ஒரு வேலை தானே.

(தொடரும்)

# நல்லூர் ஆலய சூழலில்...

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 26 ஆம் நாள் நிகழ்வு இன்று இடம்பெறும். இன்றைய நிகழ்வில் இளங்கலைஞர் மன்ற மாணவர்கள், ஆசிரியர்கள் வழங்கும் பாட்டு, பரத நாட்டிய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து *ஞானவடிவேலன் வரும் நேரம்* எனும் தொனிப்பொருளில் ம. தயாபரனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும். இதில் வயலின்- அ. ஜெயராமன், மிருதங்கம்- க.கண்ணதாசன், நட்டுவாங்கம்- வி.அனுருத்தன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக பங்கேற்கவுள்ளனர். அதனைத் தொடர்ந்து *சூரன் போர்* நாட்டிய நாடகம் இடம்பெறும். நாளை செவ்வாய்க்கிழமை வைரவ சாந்தி நிகழ்வில் எம்.என். பரமேஸ்வரன் நெறியாள் கையில் இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபையினர் வழங்கும் *வள்ளி திருமணம்* இசை நாடகம் இடம்பெறும்.

* * * * *

இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையம் நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு மகேஸ்வரன் மணிமண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்குத் தொடரில் 26 ஆம் திருவிழாவான இன்று செல்வி பவனுஜா தெய்வேந்திரத்தின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும். இதில் வயலின்- பி.சியாம், கிருஷ்ணா, மிருதங்கம்- கே. நந்தகுமார், கடம்- கே.ரவிசங்கர் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக பங்கேற்கவுள்ளனர். அத்துடன் வயலின் கச்சேரியும் இடம்பெறும்.

* * * * *

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடைபெற்று வரும் *கம்பராமாயணம்* பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா *ஸ்ரீராமபட்டாபிஷேகம்* எனும் தலைப்பில் இசைப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

* * * * *

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் ஆன்மீக சிந்தனையுடன் நடத்தும் சமயச் சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் தினமும் காலை 3 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெற்று வருகின்றது. இதில் 26 ஆம் திருவிழாவான இன்றைய நிகழ்வில் *ஆறுமுகமான பொருள்* எனும் தலைப்பில் ச.லலீசன் சிறப்புச் சொற்பொழி வாற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து உரும்பிராய் திருக்குமரன் அறநெறிப் பாடசாலை, ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு கதிரேசன் இந்து அறநெறிப் பாடசாலை, சுழிபுரம் ஜெகசோதி அறநெறிப் பாடசாலை, காரைநகர் கிழவன் காடு கலாமன்ற பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ஸ்ரீ-12)

# அமைச்சர்கள் விமல், சம்பிக்க புலனாய்வு பிரிவால் கண்காணிப்பு





(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துடன் இணைந்துள்ள கட்சிகளின் செயற்பாடுகளை அரச புலனாய்வு பிரிவினர் கண்காணித்து வருகின்றனர்.

குறிப்பாக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகியோரின் நடவடிக்கைகளும் அரச புலனாய்வு பிரிவினரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அமைச்சர் விமல் வீரவன்சவின் கீழ் தேசிய சுதந்திர முன்னணி மற்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்பன இயங்கி வருகின்றன.

சம்பிக்க ரணவக்க ஜாதிக ஹெல உறுமய என்ற கட்சியின் உறுப்பினராவார். ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினரான அத்துரலிய ரத்தின தேரர் அண்மையில் அரசாங்கத்துக்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டிருந்தார். இதனையடுத்து இந்த இரண்டு அமைச்சர்களும் அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்களா? என்பதை அவதானிக்குமாறு உயர்மட்ட உத்தரவு ஒன்று அரச புலனாய்வு பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது. குறித்த இரண்டு அமைச்சர்களும் பொதுக் கூட்டங்களில் அரசாங்கத்துக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தமது நடவடிக்கைகள் கண்காணிக்கப்படுகின்றன என்ற விடயம் தமக்கு தெரியாது என்று இரண்டு அமைச்சர்களும் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில் குறித்த இரண்டு கட்சிகளினதும் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக்கேட்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஸ்ரீ-2)

# சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியவர் விளக்கமறியலில்


(கொழும்பு)

தலாத்துஓயா பகுதியில் தரம் ஐந்தில் கல்வி கற்கும் சிறுமியொருவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் தனியார் வகுப்பொன்றை நடத்திச் சென்ற ஆசிரியரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த ஆசிரியர் கண்டி மேலதிக நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த நபர் கடுகஸ்தோட்டை பகுதியைச் சேர்ந்தவர் என்றும் இவர் இதற்கு முன்னர் அரச சேவையில் பணியாற்றும் போது பணி நிறுத்தம் செய்யப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# நல்லூரான் திருவடிக்கு இன்று பூங்காவனத் திருவிழா



## மணி மயிலும் குக்குடமும் ஆட ஆட!

இந்து மொளித் தீபமென விண் மீன் பூப்பச்
சுந்த மிகும் புகைகமழ ஓங்காரஞ் சேர்
சுந்தரனார் நல்லூரில் கவரி பூப்பக்
கந்த மலர்ச் செவ்வானம் பூப்பக் கந்தன்
வந்தாடும் குண்டலமும் கோலமிகு வேலவனார்
தந்தமுடைக் குஞ்சரத்தான் தம்பி குறநேசா
அந்த மணி மயிலும் குக்குடமும் ஆட ... ஆட
வந்தனனே வீதி வலம் ஈழ நல்லூரானே!

க.சுவஸ்திகா,
கரவெட்டி.

## எளிதாக வாழ...

நான் உன்னிடம் வர நீயே என்னிடம் வருகிறாய் முருகா!
தேன் உன்னிடம் இருக்க -நீயே என்னிடம் வருகிறாய் முருகா!
வான் கருணையாயிருக்கிறாய்- இங்கு நீ வரமாய் வருகிறாய் முருகா!
ஏன்! நீ எளிதாக இருந்தும் யாருமே எளிதாக வாழ
நினைப்பதேயில்லை!?

கே.எஸ்.சிவஞானராஜா,
கொக்குவில்.

## நாடு போற்றும் நல்லூரான்

நல்லூர் முருகனின் நாமத்தைச் சொல்லிட
நாவெல்லாம் இனிக்குதடி- அவனை
நாள்தோறும் சென்று வழிபட்டால்- எந்தன்
நெஞ்சம் குளிருதடி...
அல்லும் பகலுமே அவன் பவனி காண
நெஞ்சம் துடிக்குதடி- அவன்
வேலேந்தும் அழகிலே வீறு நடைகண்டு
கண்கள் நனையுதடி

எஸ். சிவானந்தராஜா,
பண்டத்தரிப்பு.


## கந்தா உனை அழைக்கின்றேன்...!

நல்லைப் பதிவாழும் குமரனே!
எம் மனக்குறையை செப்புகிறோம் உன்னிடமே!
பண்பாடும் மாந்தர் வாழ்ந்த அன்னை மண்ணில்
இன்று பண்பாடு காணாமல் போவதேனோ...?
அது உம்பாடு என்று பாராமல்
எம் பண்பாட்டைக் காக்க வேண்டி அழைக்கின்றேன்
எந்நாளும் உனைமறவேன் கந்தனே!
எம் குரல் கேட்டு குறைதீர்க்க ஓடிவாரும்!

ஜெ.வினோத்,
யாழ்ப்பாணம்.

# வெளிநாட்டில் பொறியியல் படிக்க...

உள்நாட்டில் உள்ள தனியார் கல்லூரிகளில் ஏராளமான பொறியியல் இடங்கள் காலியாக இருக்கையில், ஏன் பலரும் பிரிட்டன், அமெரிக்கா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு செல்கிறார்கள். இதற்கான காரணங்கள் பல. சமீபத்திய கண்டுபிடிப்புகளைப் பற்றிய அறிவு மற்றும் ஆராய்ச்சி வாய்ப்புக்களை தருவது போன்றவை முக்கியமான காரணங்கள். மேலைநாடுகள் மட்டுமின்றி சிங்கப்பூர், ஹொங் கொங் போன்ற நாடுகளில் உள்ள



கல்வி நிறுவனங்களிலும் பொறியியல் படிப்பதில் ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

இதற்கு காரணம் அவற்றில் உள் செயல்முறை கல்வி, சர்வதேச தொடர்புகள் மற்றும் நிறைய வேலைவாய்ப்புகள் போன்றவையே. சர்வதேச கல்வியின் முக்கியத்துவத்தை, உலகளாவிய நிறுவனங்களில் அதிகளவில் அங்கீகரிக்கின்றன. இலங்கையில் சிறந்த பொறியில் கல்லூரிகள் என என்பதை பற்றி ஒரு உறுதியான கணிப்பு இல்லாததால், பல மாணவர்கள், வெளிநாட்டிற்கு விண்ணப்பிக்கிறார்கள்.

பொறியியல் படிப்பிற்காக வெளிநாட்டு பல்கலையை தேர்வு செய்வதும் அவ்வளவு எளிதல்ல. ஏனெனில் ஏராளமான கல்வி நிறுவனங்கள் குவிந்திருப்பதால், எதை தேர்வுசெய்வது என்பதில் பெரும் குழப்பமே ஏற்பட்டுவிடும். அமெரிக்கா, பிரிட்டன், சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, ஜேர்மனி மற்றும் ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகள் இருக்கின்றன. பல வெளிநாட்டு கல்வி நிறுவனங்கள், தங்களுக்குள் ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொண்டு, மாணவர்களை பரஸ்பரம் அனுமதிக்கின்றன.

ஒரு வெளிநாட்டு கல்வி நிறுவனத்தை தேர்வு செய்வதில், நீண்டகால திட்டங்கள், வேலைவாய்ப்புகள், கற்பித்தல் மொழி, அணுகும் தன்மை, கற்பதற்கான செலவு போன்ற பல அம்சங்கள் பங்கு வகிக்கின்றன. தற்போதைய நிலையில், அமெரிக்கா, பிரிட்டன், கனடா, சிங்கப்பூர் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் வெளிநாட்டு பொறியியல் படிப்பிற்கான மாணவர்களை ஈர்ப்பதில் முன்னிலையில் உள்ளன.

### மாணவர் சேர்க்கை நிபந்தனை

ஒவ்வொரு நாடும் தனக்கென தனிவித மாணவர் சேர்க்கை செயல் முறையைக் கொண்டிருக்கும். ஆனால் பல நாடுகளில் பொதுவாக இருக்கக்கூடிய சில விதிமுறைகளை இங்கே காணலாம்.

♦ மேல்படிப்பிற்கு விண்ணப்பிக்கும் நாட்டிற்கு சமமான உயர்நிலைப் பாடசாலையில்கல்வியை முடிந்திருக்க வேண்டும். அதேசமயம் , படிப்பில் சிறப்பான செயற்பாடும், பெறுபேறும் இருப்பது முக்கியம்.



♦ சிறந்த ஆங்கில புலமை இருக்க வேண்டும் மேலும் IELTS தேர்வுகளிலும் நல்ல புள்ளிகள் பெற்று உங்களின் ஆங்கில அறிவை நிரூபித்திருக்க வேண்டும்.

♦ மாணவர்களின் பாடமல்லாத, இதர திறன் சார்ந்த நடவடிக்கைகளுக்கும் சில வெளிநாட்டு கல்வி நிறுவனங்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றன. அதேசமயம் இதை பல கல்வி நிறுவனங்கள் படிப்பிற்கான தகுதியான கருதவில்லை.

♦ சில நாடுகளில் பட்டப்படிப்பில் சேர்வதற்கான குறைந்தபட்ச தகுதி வயது 18 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

♦ பல வெளிநாட்டு பொறியியல் படிப்புகளில், நீங்கள் உயர் தரத்தில் கணிதத் துறையில் நன்றாக படித்திருப்பீர்கள் என்று நினைத்து உங்களை சேர்த்துக் கொள்வார்கள்.

### விண்ணப்பிக்கும் காலம்

ஒரு படிப்பானது ஆரம்பிப்பதற்கு முன்பாக, சேர்க்கை நடைமுறைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. இதனால் உயர்தரம் படிக்கும் மாணவர்கள், சேர்க்கைக்கான தகுதிகளை சரிபார்த்துக் கொள்ள வேண்டும். தகுதி தேர்வுகளை சிறப்பாக எழுத, சிறந்த முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு வெளிநாட்டு கல்வி நிறுவனத்தில் ஒரு மாணவர் விண்ணப்பிக்கும் முன்பாக, சில முக்கிய விடயங்களை கவனத்தில்கொள்ளவேண்டும்.

♦ உங்களின் எதிர்கால தொழில் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் பாடத்திட்டம் இருக்கிறதா?

♦ அங்கீகாரம்

♦ படிப்பிற்கான செலவு

♦ படிப்பின் கால அளவு

ஒன்லைன் விண்ணப்பமுறை சில ஆண்டுகளாகவே வழக்கத்தில் இருப்பதால் விண்ணப்பித்தல் என்பது எளிதான ஒன்றாகவே உள்ளது. பொதுவாவே அனைத்து கல்வி நிறுவனங்களும் சில முக்கிய விடயங்களையே எதிர்பார்க்கின்றன.

♦ உங்கள் படிப்பின் பெறுபேற்றுச் சான்றிதழ்கள் மற்றும் உங்களின் ஏதேனும் ஆராய்ச்சிகள்.

♦ உங்களது ஆசிரியர்களின் பரிந்துரை கடிதங்கள்

♦ தனிப்பட்ட அறிக்கைகள்

♦ நிதி ஆதார ஆவணங்கள் போன்றவை முக்கியமான அம்சங்கள். இவை ஏறக்குறைய அனைத்து வெளிநாட்டு கல்வி நிறுவனங்களில் விண்ணப்பிக்கவும் அவசியமானவை. மற்றபடி உங்களுக்கு ஒரு தனிப்பட்ட கல்வி நிறுவனத்தைப் பற்றி அதிகளவான விபரங்கள் தெரிய வேண்டுமெனில் அந்தந்த கல்வி நிறுவன வலைத்தளத்திற்கு சென்று தெரிந்து கொள்ளலாம்.

## அறிவுக் கலசம்

ஆர்.யூ.பாலமுருகன்

# நோட்டிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் படிக்க விருப்பமா?



பிரிட்டனிலுள்ள நோட்டிங்ஹாம் பல்கலைக்கழகமானது எப்போதுமே பிரிட்டன் பல்கலைகள் என்ற அளவில் முதல் 10 இடங்களுக்குள்ளும் உலக அளவில் 100 இடங்களுக்குள்ளும் இடம்பெற்று வருகிறது. சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் பிரிட்டனில் நடத்தப்படும் ஆய்வு முயற்சிகளில் நோட்டிங்ஹாம் பல்கலையில் செய்யப்படும் ஆய்வு முயற்சிகள் 90% சர்வதேச தரத்தில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மொத்தம் 32 ஆயிரத்து 44 மாணவர்கள் (அவர்களில் 8 ஆயிரத்து 428 பேர் வெளிநாட்டு மாணவர்கள்). பிரிட்டனிலுள்ள இப் பல்கலைக்கழகத்தின் 3 வளாகங்களில் சேர்க்கைப் பெற்றுள்ளனர்.

பிரிட்டன் பல்கலைகளிலேயே வெளிநாடுகளில் நல்ல வசதியுடன் கூடிய வளாகங்களை ஏற்படுத்தி



யிருப்பது இந்தப் பல்கலைதான். கடந்த 2000 ஆம் ஆண்டில் மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் ஒரு வளாகம் கட்டப்பட்டது. பின்னர் 2004 ஆம் ஆண்டு சீனாவில் ஒரு வளாகம் கட்டப்பட்டது. சீன வளாகத்தில் மொத்தம் 4 ஆயிரத்து 500 மாணவர்களும் கோலாலம்பூர் வளாகத்தில் மொத்தம் 3 ஆயிரத்து 224 மாணவர்களும் சேர்க்கைப் பெற்றுள்ளனர்.

மேலும் உலகெங்கிலும் 40 நாடுகளிலுள்ள 320 பல்கலைகளுடன் இப்பல்கலை கல்வி சம்பந்தமான தொடர்புகளை வைத்துள்ளது. மேலும் உலகின் பல சிறந்த பல்கலைக்கழகத்தின் சிறப்புக் கூறுகளை இப்பல்கலை தன்னகத்தே பெற்றுள்ளது. சிறந்த மாணவர்களுக்கு உலகின் பல இடங்களில் வேலைவாய்ப்புக்களையும் இப்பல்கலை அளிக்கிறது. மாணவர்கள், சிறந்த அனுபவத்தைப் பெற்று தங்களின் எதிர்கால வாழ்வை சிறப்பான முறையில் வழிநடத்த முடியும்.

### நோட்டிங்ஹாம் நகரம்

இந்த நகரத்தில் சுமார் 3 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். இந்த நகரம் ஒரு நல்ல காஸ்மாபாலிடன் நகரம். இந்நகரில் உலகப்புகழ் பெற்ற ரொபின் ஹசிட் பிறந்தார். மேலும் Lord Byron, D.H.லோரன்ஸ் மற்றும் அலன்சிலிட்டோ உள்ளிட்டோரும் இந்நகரைச் சேர்ந்தவர்களே. இந்நகரில் நிறைய வசதிகளும் பல பொழுதுபோக்கு அம்சங்களும் உள்ளன. இங்கிருந்து லண்டன் நகருக்கு ரயிலில் செல்லவெறும் 90 நிமிடங்களே ஆகும்.

### வளாக வசதிகள்

இந்தப் பல்கலைக்கழகம் மொத்தம் 3 வளாகங்களில் அமைந்துள்ளது. இதன் முக்கிய வளாகம் 330 ஏக்கரில் விரிந்துள்ளது. இந்த வளாகத்தில்தான் பலவித கல்வித் துறைகள் உட்பட 4 நூலகங்கள் , ஒரு நல்ல விளையாட்டு மைதானம், ஒருமியூசியம் உள்ளிட்ட பல அம்சங்கள் உள்ளன. இந்தப் பல்கலை மாணவர்கள் 190 க்கும் மேற்பட்ட மாணவர் அமைப்புக்களையும் 75 விளையாட்டு அமைப்புக்களையும் நடத்துகின்றார்கள். இத்தகைய அமைப்புகளும் மையங்களும் பலவித நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

### மாணவர் சேர்க்கை

பிரிட்டனில் அனைத்து இளநிலைப் படிப்புக்களுக்கான சேர் க்கையும் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் சேர்க்கை சேவை (UCAS) என்ற அமைப்பின்மூலம் தான் நடைபெறுகின்றது.

வெளிநாட்டு மாணவர்கள் இந்த அமைப்பின் www.ucas.com இணையத்தளம் மூலம் ஒன்லைனில் விண்ணப்பிக்கலாம். இந்தப் பல்கலையின் UCAS கோட் N84. அதேசமயம் முதுநிலை மற்றும் கலாநிதிப் பட்டப்படிப்புக்களை மேற்கொள்ள விரும்பும் வெளிநாட்டு மாணவர்கள் பல்கலைக்கு நேரடியாக விண்ணப்பிக்க வேண்டும்.

நோட்டிங்ஹாம் பல்கலையில் இளநிலைப் படிப்பில் சேர ஒரு மாணவர் குறைந்தபட்சம் க.பொ.த. உயர்தரத்தில் தேறியிருக்க வேண்டும். மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் IELTS ஆங்கிலத்தில் தகுதித் தேர்வை எழுதி தேறியிருக்க வேண்டும்.

சேர்க்கைத் தகுதிபெறாத மாணவர்கள் இப் பல்கலையில் பவுண்டேன் படிப்பில் சேரலாம்.


மருத்துவம் மற்றும் கால்நடை மருத்துவப் படிப்புகளில் வரும் 2012 செப்டெம்பர் மாத சேர்க்கைக்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் எதிர்வரும் ஒக்டோபர் 15 ஆம் திகதி. ஏனைய படிப்புகளுக்கு 2012 ஜனவரி 15 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றிய மேலும் விரிவான விபரங்களை அறிய www.nottingham.ac.uk. என்ற இணையத்தளம் செல்லவும்.

இங்கு தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு மிகவும் சிறப்பான முறையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் விரும்பினால் வாடகை கொடுத்து தங்குவதற்கான தனியார் தங்குமிடங்களும் நோட்டிங்ஹாம் நகரத்தில் உள்ளன. இப் பல்கலைக்கழகமானது பலவிதமான இளநிலை, முதுநிலை மற்றும் கலாநிதி பட்டப்படிப்புக்களை வழங்குகின்றது.

# நவீன எண் சோதிடம்



## கடன் வாங்குதலையும் பிறருக்குத் தலை வணங்குதலையும் வெறுப்பவர்கள் (31)

### உடல் எண் 4 உயிர் எண் 2

4,13,22,31 போன்ற தேதிகளில் பிறந்து, பிறந்த தேதி, மாதம், வருடம் இம் மூன்றறையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 2 வருமேயானால் இவர்கள் ராகு, சந்திரன், ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்களது உயிர் எண் சந்திரனாக இருப்பதால் அடிக்கடி மனநிலை, திடம் குறைந்து, பின் தெளிவடையும். சிலருக்கு அடிக்கடி சளி பிடித்துக் கொள்ளும். பார்ப்பதற்கு கம்பீரமாகக் காட்சியளித்தாலும் திடீரென்று மனம் குழம்புவர். வசதி படைத்த குடும்பத்தில் பிறந்தவராக இருந்தாலும் இவர்களை ஆண்டவன் சோதனை செய்தே மேன்மையாக்குவார். ஆனால் பெயர் பொருத்தமாக அமைந்திருக்குமேயானால் சோதனையின்றி வாழ்க்கையில் மேன்மையடையலாம்.

இயற்கையாகவே உயிர் எண்ணை உடல் எண் கிரகணம் பிடிப்பதால், ஏதாவது ஒரு பிரச்சினையை, சுமந்து கொண்டேயிருப்பர். ஆரோக்கியம், வாழ்க்கைத்துத் துணை, குழந்தைகள், செல்வம் இவற்றில் ஏதாவது ஒன்றில் குறைபாடு இருக்கும். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் எவ்வித குறையும் இல்லாமல் வாழ்வர். பிறருக்கு உதவும் மனப்பான்மையுடன், எப்பொழுதும் சுறுசுறுப்பாகவே காட்சியளிப்பர்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

தன் மனம் நேர்மையையே விரும்புவதால் தீயகாரியங்கள் செய்ய மனம் கூசுவர். சிரமப்பட்டு பணம் சம்பாதிக்கும் இவர்களுக்கு செலவு காத்துக் கொண்டிருக்கும் நல்ல முன்னேற்றம் இருக்கும் நேரத்தில் திடீரென்று எல்லாம் சூன்யமாகி விடும். ஆனால் பெயர் நன்றாக அமைந்து விடுவதால், அவர்களின் உதவியால் மகிழ்ச்சியாகவும், வசதியாகவும் வாழ்வர். துன்பம், துயரம் எவ்வளவு வந்தாலும் தாங்கிக் கொள்ளும் மனம் கொண்ட இவர்களுக்கு ஆறுதல் கூறவும், அதே நேரத்தில் உதவவும் பலர் முன் வருவர். போலியாக நடக்கத் தெரியாத இவர்கள் தன்மனக் கருத்துக்களைத் தெளிவாக வெளியிடுவர். கடன் வாங்குதலையும் பிறருக்குத் தலை வணங்கிப் போவதையும் வெறுப்பவராவர்.

அன்புக்கு அடிபணியும் இவர்களிடம், அன்பால் எதையும் சாதித்துக் கொள்ளலாம். நாணயமாக இருக்க ஆசைப்படும் இவர்கள், பிறரும் தன்னிடம் நாணயமாக நடந்து கொள்ளவேண்டும் என்று ஆசைப்படுவர்; இவர்களுடைய பிறந்த தேதி எண்களுக்குப் பொருத்தமானதாக பெயர் அமைந்து விட்டால் நல்ல முன்னேற்றமும், வீடு, நிலம், வாகனம் போன்ற வசிதியுடனும் வாழ்வர். பசி என்று யார் சென்றாலும், உடனே உதவும் இளகிய மனம் கொண்வர்களாதலால் ஆண்டவன் இவர்களை எந்த சந்தர்ப்பங்களிலும் கைவிடுவதில்லை. வாதம் செய்வதில் திறமை வாய்ந்த இவர்கள் குறுக்குக் கேள்வி கேட்பதிலும், பெரியவர்கள் பேசுவதை அப்படியே கிரகித்துக் கொள்வதிலும் சிறந்தவர்கள். சாஸ்திரம், சட்டம், சமயம், ஜோதிடம் போன்றவற்றில் ஆராய்ச்சியுடையவராக விளங்குபவர். தன்னுடைய கல்வியைப் பூர்த்தி செய்வதற்குள் பல தோல்விகளை சந்தித்து வெற்றி பெறுவர்.

பள்ளிப்படிப்பை விட உலக அனுபவப்படிப்பால் உயர்ந்த இடத்தை வகிப்பர். உத்தியோகம் செய்பவர் சிலர். ஆனால், வியாபாரம் செய்பவர்கள் பலர், இந்த எண்ணிக்கையில் இருக்கின்றனர்.

**தொழில்**

இவர்களுக்கு வாகனத்தாலும், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு பொருட்களை அனுப்புவதாலும், கல், நெருப்பு, இரும்பு சம்பந்தப்பட்ட பொருளாலும், ஆடம்பரப் பொருள், திரவ சம்பந்தமான பொருட்களாலும், வாழ்க்கையில் உயர்ந்த இடத்தை வகிப்பர்.

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

**நோய்**

உஷ்ண சம்பந்தமான வியாதிகள் அனைத்தும், பைல்சு, வறிற்றுக் கோளாறு, முதுகுவலி, அடிக்கடி சளி பிடித்தல் போன்றவைகள் வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை**

ராகு, சந்திரன், ஆதிக்கத்தில் பிறந்திருப்பதால், சுக்கிரன், சூரியன் ஆதிக்கமான 15,24,33,42, 51,60, 69,19,37,46,64 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்- 6,1

யோகமானதேதிகள்-6,15,24, 1,10,19,28

யோகமானநிறம்- மஞ்சல், வெளிர் நீலம், சந்தனக் கலர், வெளிர் பச்சை.

யோகமான மோதிரக்கல்- கோமேதகம், வெளிர்நீலக்கல்

ஆகாதநிறம்-கறுப்பு, சிவப்பு, காப்பிக் கலர்

ஆகாத தேதிகள்-8,17,26,


### பெயர் எண்களின் பலன்

**100 எண் பலன்**

இந்த எண்ணை பெயராகக் கொண்டால் முன்னேற்றம் படிப்படியாக ஏறும். இவர்களுக்கு பொறுமை இயற்கையாகவே அமைந்துவிடும். பெரும்யோகக் காரராக இல்லாவிட்டாலும், சிறிய அளவில் வசதியைப் பெற்று, திருப்திகரமாக வாழ்வர். பெரும் திட்டங்களில் இறங்கினால் தோல்விதான் கிடைக்கும். இதனால் சிறிய சிறிய தொழில்களிலும் பல்வேறு முயற்சிகளிலும், பணம் அதிகம் சேர்க்கும் பாக்கியம் உண்டு. பல்வேறு அனுபவங்கள் இல்லாத ஒரு கட்டத்திற்குள்ளே வாழ்க்கை அமையும்.

**101 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராகக் கொண்டவர்களுக்கு முதல் இல்லாத வருமானம் அதிகம் இருக்கும். அதோடு பல அரசாள்பவரது தொடர்பால் உதவியும் கிடைக்கும். கமிஷன், ஏஜென்சி போன்றவற்றால் லாபம் தரும். இந்த எண் திடீரென்று ஒருநாள் எல்லா



வருமானத்தையும் நிறுத்திவிடும். அத்தோடு புத்தியையும் கெடுத்து விடும். இதனால் இந்த எண் 7,16,25 தேதியில் பிறந்தவர்களைத் தவிர மற்றவர்களுக்கு நன்மையளிக்காது.

**102 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராகக் கொண்டால் தொடர்ந்து வெற்றி கிட்டாது. தான் பலநாள் உழைத்துச் சேர்த்த பொருளை ஒருநாள் இழக்கும் சந்தர்ப்பம் வரும். தேவையற்ற காரியங்களில் தலையிட்டு மனதைக் குழப்பிக் கொண்டு வாழ்நாட்கள் முழுவதும் குழப்பவாதியாக வாழும் இவர்கள் 3,12,21 போன்ற திகதிகளில் பிறந்திருந்தால் மட்டும் சில நன்மைகளை அடைவர்.

**103 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் உடையவர்களின் பெற்றோர்கள் ஏற்கனவே வசதி படைத்தவர்கள். பாரம்பரியதான தொழிலை மாற்றி புதுமையான தொழில் செய்ய முற்படுவர். பல்வேறு கஷ்டங்களுக்கு இடையில் நிரந்தரமான தொழிலையும் நிரந்தரமான வருமானத்தையும் அமைத்துக் கொள்ளுவர். இதனால் இந்த எண் விரும்பத்தக்கதே. 1,10,19,28 போன்ற தேதியில் பிறந்தவர்கள் இந்த எண்ணைப் பெயராகவோ, வியாபார விலாசமாகவோ வைத்துக் கொண்டால் முன்னேற்றம் பெறலாம்.

**104 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் கொண்டால் உலகோர் பிரமிக்கும் படியான அற்புதங்கள் செய்வர். புகழ்ச்சியில் மயங்கும் இவர்கள், புகழுக்காக கஷ்டப்பட்டு பல காரியங்களைச் சாதிப்பர். ஆனால் தனக்கு எவ்வித மான பிரயோசனமும் கிடைக்காது. பார்ப்பதற்கு மிடுக்காக காட்சியளிக்கும் இவர்கள் எப்பொழும் தன்னைச் சுற்றி ஒரு கூட்டம் இருக்க வேண்டும் என்று விரும்புவர்.

(தொடரும்)

# அவசரகால சட்டம் நீக்கம் ஐரோ. ஒன்றியம் வரவேற்பு

(கொழும்பு)

இலங்கையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

அவசரகாலச் சட்டத்தை தொடரும் உத்தேசம் கிடையாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 25 ஆம் திகதி விடுத்த அறிவிப்பு பாராட்டப்பட வேண்டியது என ஐரோப்பிய ஆணைக்குழுவின் துணைத் தலைவர் கெதரீன் அஸ்டான் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இயல்பு நிலைமையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் முக்கியமான தீர்மானமாக அவசரகாலச் சட்ட நீக்கம் கருதப்பட வேண்டும். அவசரகாலச் சட்ட நீக்கத்தின் மூலம் முக்கியமான அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் என நம்பிக்கை வெளியிட்டுள்ள அவர் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதன்மூலம் நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த முடியும் என்பதே ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாடாக அமைந்திருந்தது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-5)

## கிறீஸ்பூதம் தொடர்பில்

# ஆர்ப்பாட்டம் செய்வோரை கண்காணிக்க ஆளில்லா உளவு விமானங்கள்

(கொழும்பு)

கிறிஸ் பூத சர்ச்சை தொடர்பில் கண்காணிப்பு மேற்கொள்ள ஆளில்லா உளவு விமானங்கள் பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கில் படை முகாம்களில் கிறிஸ் பூதங்கள் இருப்பதாகத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்வோரை அடையாளம் காணும் நோக்கில் இந்த உளவு விமானங்கள் பயன்படுத்தப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்திய பொதுமக்கள் தொடர்பிலான புகைப்படங்கள் ஏற்கனவே இவ்வாறு ஆளில்லா உளவு விமானங்களைப் பயன்படுத்தி எடுக்கப்பட்டுள்ளது.

கிறிஸ் பூத வதந்திகளை கிளப்பி முகாம்கள் மீது தாக்குதல் நடத்தியோரின் புகைப்படங்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

போராட்டங்களில் கலந்து கொண்டவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளின் பின்னணியில் வெளிநாட்டுச் சக்திகள் இயங்கக் கூடும் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)


# சமூக சேவைகள் அமைச்சு

## முதியோர்களுக்கான பராமரிப்பு சபை

### (2000 இலக்க 09 ஆம் சட்டம்)

'முதியோர்களுக்கான பராமரிப்புச் சபை' முதியோர்களினது உரிமைகளை பாதுகாப்பதற்காக தோற்றுவிக்கப்பட்டு தற்போது செயற்பட்டு வருகின்றது.

தமது பிள்ளைகளினால் பராமரிக்கப்படாத, வாழ்வதற்கு போதுமான அளவு வருமானம் இல்லாத, முதுமையான பெற்றோர்களுக்கு தமது பிள்ளைகளிடமிருந்து ஏதேனும் பராமரிப்பு நிதியினைப் பெற்றுக் கொள்ளத் தேவையெனில் அதற்கு உரிய விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து கீழ் குறிப்பிடப்படும் விலாசத்திற்கு மேற்குறிப்பிட்ட சபைக்கு சமர்ப்பிக்க முடியும். அதற்கு உரித்தான விண்ணப்பப்படிவத்தினை உரிய கிராமசேவை உத்தியோகத்தர் / பிரதேச செயலாளர் ஆகியோரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

60 வயதினைத் தாண்டிய பெற்றோர்கள் இச் செயல் திட்டத்தின் கீழ் முதியோர்களாக கணிக்கப்படுவார்கள்.

இருப்பினும் 60 வயதிற்கு கீழ்ப்பட்ட பெற்றோர்கள் தமது சொந்த பராமரிப்பிற்காக போதுமான அளவு வருமானத்தினை தேடிக் கொள்ளமுடியாது. ஏதேனும் உடல் ரீதியான, உள ரீதியான தாக்கங்களுக்கு உட்பட்டவரேனில் அவர்களும் விண்ணப்பப்படிவத்தினை சபைக்கு சமர்பிக்க முடியும்.

பராமரிப்பு விண்ணப்பப்படிவத்தில் முறைப்பாட்டாளரின் வருமானம் மற்றும் அவரது உரிய ஏனைய விபரங்கள் அனைத்தும் பிழையற்ற விதத்தில் குறிப்பிடுதல் வேண்டும். அதேபோன்று பிரதிவாதியாக கருதப்படும் பிள்ளைகளின் பெயர்கள், பிழையற்ற விலாசம், தொழில் மற்றும் மாதாந்த வருமானம் (சராசரியாக) குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பட்டதன் பின்பு குறிப்பிட்ட தரப்பினரை சபையின் குழுவின் முன் அழைத்து பரீசீலித்ததன் பின்பு பராமரிப்பு சிபார்சு செய்யப்படும்.

**விண்ணப்பப்படிவத்தினை அனுப்ப வேண்டிய முகவரி:-**

செயலாளர்,
முதியோர் பராமரிப்பு சபை,
முதியோர்களுக்கான தேசிய செயலகம்,
இல.150 ஏ.எல்.எச்.பி.கட்டடம்,
நாவல வீதி,
நுகேகொடை.
தொடர்பு:- 011 2824082,
பக்ஸ்:- 011 2282675 (இ)

செயலாளர்,
சமூக சேவைகள் அமைச்சு.


# 2011.08 29 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 708- செப்பு நாணயம் முதன் முதலில் ஜப்பானில் வார்க்கப்பட்டது.

★ 1498-வாஸ்கொடகாமா கோழிக் கோட்டில் இருந்து போர்த்துக் கல் திரும்ப முடிபு செய்தார்.

★ 1521-ஒட்டோமான் இராணுவம் பெல் கிரேட் நகரைக் கைப்பற்றியது.

★ 1541-ஒட்டோமான் துருக்கியர் ஹங்கேரியின் தலைநகரைக் கைப்பற்றினர்.

★ 1655-வார்சா சுவீடனின் பத்தாம் சார்ள்ஸ் குஸ்டாவின் சிறு படைகளிடம் சரணடைந்தது.

★ 1658-புரொட்டஸ்தாந்து சீரமைப்பு யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக வண.டாக்டர் பால்டியஸ் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1756-ரஷ்யாவின் இரண்டாம் பிரெடெரிக் ஜேர்மனியின் சாக்சனியை முற்றுகையிட்டான்.

★ 1782-திருகோணமலை கோட்டையை பிரெஞ்சுக்காரர் பிரித்தானியரிடம் இருந்து மீளக் கைப்பற்றினர்.

★ 1825-பிரேசிலைத் தனிநாடாக போர்த்துக்கல் அறிவித்தது.

★ 1831-மைக்கேல் பரடே மின்காந்தத் தூண்டலைக் கண்டுபிடித்தார்.

★ 1842-நாஞ்சிங் உடன்படிக்கையின்படி முதலாம் அபின் போர் முடிவுக்கு வந்தது. ஹொங்கொங் ஐக்கிய இராச்சியத்தின் குடியேற்ற நாடாக அறிவிக்கப்பட்டது.

★ 1882-தேர்வுத் துடுப்பாட்டத்தில் லண்டனில் அவுஸ்திரேலியா இங்கிலாந்தை 7 ஓட்டங்களால் தோற்கடித்தது. பின்னர் பிரபலமான ஆஷஸ் தொடர் ஆரம்பமாக இது வழிவகுத்தது.

★ 1885-கோட்லீப் டாயிம்லர் மோட்டார் சைக்கிளுக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1898- குட்இயர் கம்பனி ஆரம்பிக்கப் பட்டது.

★ 1907-கியூபெக் பாலம் அமைக்கப் படும் போது இடிந்து வீழ்ந்ததில் 75 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

★ 1910-ஜப்பானியர் கொரியாவின் பெயரை சோசென் (Chosen) என மாற்றினர்.

★ 1930-சென் கில்டா தீவுகளின் கடைசி குடிமக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு ஸ்கொட்லாந்தின் ஏனைய பகுதிகளுக்குக் குடியேற்றப்பட்டார்கள்.

★ 1944-60 ஆயிரம் சிலவாக்கியர் நாசிகளுக்கு எதிராகக் கிளர்ச்சியை ஆரம்பித்தனர்.

★ 1944-அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமையில் அமைக்கப்பட்டது.

★ 1949-சோவியத் ஒன்றியம் ஜோ 1 என்ற தனது முதலாவது அணுகுண்டுச் சோதனையை கசகஸ்தானில் நடத்தியது.

★ 1966-பீட்டில்ஸ் தமது கடைசி நிகழ்ச்சியை சான் பிரான் சிஸ்கோவில் நடத்தினர்.

★ 1991-சோவியத் உயர்பீடம் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் அனைத்து நடவடிக்கைகளையும் முடக்கியது.

★ 1996-நோர்வேயில் பயணிகள் விமானம் ஒன்று ஸ்பிட்ஸ் பேர்ஜன் என்ற தீவில் உள்ள மலையுடன் மோதியதில் 141 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1997-அல்ஜீரியாவில் ரைஸ் என்ற இடத்தில் 98 ஊர்மக்கள் இஸ்லாமியத் தீவிரவாதிகளினால் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 2005-அமெரிக்காவின் லூசியானா முதல் புளோரிடா வரையான கரையோரப் பகுதிகளை சூறாவளி கத்ரீனா தாக்கியதில் ஆயிரத்து 836 பேர் கொல்லப்பட்டு $115 பில்லியன் சேதம் ஏற்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1632-ஜோன் லாக், ஆங்கிலேயத் தத்துவவியலாளர் (இ.1704)

★ 1936-ஜோன் மெக்கெய்ன், அமெரிக்க அரசியல்வாதி, 2008 குடியரசுத் தலைவர் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளர்

★ 1958-மைக்கேல் ஜாக்சன், அமெரிக்கப் பாடகர் (இ.2009)

★ 1959-அகினேனி நாகர்ஜுனா, இந்திய நடிகர்

★ 1977-விஷால், திரைப்பட நடிகர்

### இறப்புக்கள்

★ 1976-காசி நஸ்ருஸ் இஸ்லாம், வங்காளக் கவிஞர் (பி.1899)

★ 2008-ஆர்.வி, தமிழ் எழுத்தாளர் (பி.1919)

★ 2009-மாலை வரோதயன், ஈழத்து எழுத்தாளர்

### சிறப்பு நாள்

★ இந்தியா- தேசிய விளையாட்டு தினம்.

# அன்னா ஹசாரேயின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டது மத்திய அரசு

## உண்ணாவிரதப் போராட்டம் வெற்றி

(புதுடில்லி)

லோக்பால் மசோதாவில் மக்கள் விரும்பும் அம்சங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரசு ஏற்றது. இதனையடுத்து ஹசாரே நேற்று காலை 10.20 மணிக்கு தனது உண்ணாவிரத போராட்டத்தை 3 சிறு குழந்தைகள் கொடுத்த இளநீரை பருகி உண்ணாவிரதத்தை முடித்தார்.

இது ஜனநாயகத்திற்கும் மக்கள் சக்திக்கும் கிடைத்த வெற்றி என ஹசாரே ஆதரவாளர்கள் தெரிவித்தனர். உண்ணாவிரதம் முடிந்ததும் இசை கலைஞர்கள் மகிழ்ச்சி பொங்கிட பாடினர். ஹசாரே கை கைதட்டிய படி ரசித்தார்.

விரதத்தை முடித்து மேடையில் பேசிய ஹசாரே எனது போராட்டத்திற்கு ஆதரவு அளித்த நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து கொள்கின்றேன். இது இந்திய மக்களுக்கு கிடைத்த வெற்றி. இளைஞர்கள் சக்தி இந்த போராட்டத்தில் சிறப்பு இடத்தை பிடித்தது.

மக்கள் சக்தி பாராளுமன்றத்தை விட பலமானது என்பதை நினைவுபடுத்துகிறேன் நடந்து முடிந்திருக்கும் இந்த போராட்ட அணுகுமுறையில் எவ்வித அசம்பாவிதமும் சட்ட ஒழுக்கத்துடன் நடந்திருக்கிறது. இது ஒரு சிறப்பான முன்னுதாரணம் ஆகும் என்றார்.

சுதந்திரதின மறுநாளில் 3 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து ஆரம்பித்த இந்த உண்ணாவிரதப் போர் நாடு முழுவதும் பெரும் ஆதரவு அலையை எழுப்பியது. நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் ஹசாரேவுகு ஆதரவு குரல் ஒலித்தது. அவர் உண்ணாவிரதம் ஆரம்பித்த ராம்லீலா மைதானத்தில் இலட்சக்கணக்கான தொண்டர்கள் அவருடன் உண்ணாவிரதம் இருந்தனர்.

நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி அறிக்கை அளித்தபின் விவாதம் நடத்துவது என மத்திய அரசு முடிவெடுத்தது. இதை பா.ஜ.க ஏற்றுக் கொண்டதையடுத்து பாராளு மன்றில் இரு சபைகளிலும் பலமான லோக்பால் விவகாரம் குறித்து நேற்று முன்தினம் அனல் பறக்கும் விவாதம் நடந்தது. பெரும்பாலான கட்சிகள் பலமான லோக்பால் மசோதா பாராளுமன்றில் நிறைவேற்றப்பட வேண் டும் என்பதை வலியுறுத்தின. ஹசாரேயின் கோரிக்கைகளுக்கும் ஆதரவு தெரிவித்தன.

மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, பா.ஜ.க மூத்த தலைவரும் ராஜ்யசபா எதிர்க்கட்சித் தலைவருமான அருண் ஜெட்லியுடன் ஆலோசனை நடத்தினர். பாராளுமன்றில் நடைபெறும் விவாதத் தின் இறுதியில் தீர்மானம் நிறைவேற்றுவது என்றும் முடிவெடுக்கப் பட்டது. இதுகுறித்து தகவல் ஹசாரே தரப்புக்கு தெரிவிக்கப்பட்டது.

தீர்மானத்தை வாசி த்த நிதி அமைச்சர் பிரணாப்முகர்ஜி தெரிவிக்கையில், ஹசாரேவின் மூன்று கோரிக்கை களை இந்த சபை ஏற்கிறது. பலமான சட்ட நடைமுறைகளை கொண்டு வந்தாலும் ஊழலை அடியோடு ஒழிக்க முடியாது. 40 ஆண்டுகளாக லோக்பால் மசோதாவைநிறைவேற்ற முடியவில்லை. இதில் அரசுக்கும் பொறுப்பு உள்ளது. தற்போதையநடைமுறையில் மாற்றம் தேவைப் படுகிறது. தற்போதுநிறைவேற்றப்படும் இந்த தீர்மானம் அடுத்த கட்டமாக பாராளுமன்ற நிலைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும்என்றார்.



இதைத் தொடர்ந்து ஹசாரேயின் மூன்று அம்சகோரிக்கை களை ஏற்பது குறித்த தீர்மானம் இரு சபைகளிலும் ஏகமானதாக நிறைவேற்றப்பட்டது. குரல் வாக்கெடுப்பு இல்லாமல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பலமான லோக்பால் மசோதாவுக்காக தொடர்ந்து 12 நாட்களாக உண்ணாவிரதம் இருந்த ஹசா ரேயின் போராட்டத்திற்கு வெற்றி கிடைத்தது. மசோதா தொடர்பாக அவர் முன்வைத்த கோரிக்கைகள் பாராளுமன்றின் தீர்மான மாக நிறைவேற்றப்பட்டதன் மூலம் ஊழலுக்கெதிரான அவரது போராட்டத்திற்கு பலன் கிடைத்துள்ளது.

(ஸ்ரீ-4)

# மூவரின் தூக்குத் தண்டனையை சட்டரீதியாக இரத்துச் செய்ய முடியும்

## சீமான் நம்பிக்கை



(சென்னை)

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் தூக்கு தண்டனையை சட்ட ரீதியாக இரத்து செய்ய முடியும் என்று முன்னுதாரண தீர்ப்புகளைச் சுட்டிக்காட்டி நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேலும் இம்மூவரின் சார்பில் ராஜ்ஜெத்மலானி உள்ளிட்ட மூத்த வழக்கறிஞர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிடுவார் என்று அவர் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில், ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் கருணை மனுக்களை குடியரசுத் தலைவர் நிராகரித்துவிட்டதாலேயே அவர்களின் வாழ்க்கைக்கு முடிவு நிர்ணயிக்கப் பட்டது என்று கருத வேண்டியதில்லை.

இந்த மூவரும் 2000 ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவருக்கு கருணை மனுக்களை அனுப்பி வைத்தார்கள். அதனை 11 ஆண்டுகள் கிடப்பில் வைத்திருந்த பின் ப.சிதம்பரம் அமைச்சராகப் பொறுப்பு வகிக்கும் மத்திய உள்துறை அமைச்சகத்தின் பரிந்துரையின்படி குடியரசுத் தலைவர் நிராகரித்துள்ளார்.

இந்த 11 ஆண்டுகளுக்கு அவர்கள் மரண தண்டனை உண்டா இல்லையா என்ற மனவேதனையிலேயே கழித்திருக்கிறார்கள். அவர்கள் மட்டுமல்ல அவர்களின் குடும்பத்தினரும் அதே மனவேதனையில் தான் இருந்திருக்கிறார்கள்.

### உயர் நீதிமன்றத்தில் வழக்கு

இப்போது இந்த மூன்று பேரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவுள்ளனர். தங்களுடைய கருணை மனுக்களை 11 ஆண்டுகள் தாமதித்து நிராகரித்திருப்பது அரசமைப்பு சட்டரீதியாக நியாயமற்றது என்று அவர்கள் வழக்கைத் தொடரவுள்ளனர்.

அவர்கள் சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் ராம் ஜெத்மலானி, காலின் கான்சிலோவ்ஸ், யுக் மொகித் கவுத்ரி ஆகியோர் ஆஜராக உள்ளனர். அதுமட்டுமன்றி குற்றச்செயல் முடிந்த நாள் முதல் 20 ஆண்டுகளுக்கும் மேலாக தாங்கள் தொடர்ந்து சிறையில் அடைக்கப் பட்டுள்ளதையும் மனுவில் தெரிவித்து 20 ஆண்டுகால சிறைவாசத்துக்குப் பின் இப்போது மரண தண்டனையையும் நிறைவேற்றினால் அது ஒரே குற்றத்துக்காக இரண்டு முறை தண்டிக்கப்படுவதாகும் என்றும் அது சட்டப்படி நியாயமற்றது என்றும் தங்கள் மனுவில் தெரிவிக்கவுள்ள்னர்.

### முன்னுதாரண தீர்ப்பு

இப்படி கருணை மனுக்களை நீண்ட காலம் கிடப்பில் வைத்து நிராகரித்த மரண தண்டனை குற்றவாளிகள் ஏற்கனவே தொடர்ந்து வழக்குகளில் அவர்களின் தண்டனையைக் குறைத்து இந்த உச்சநீதிமன்றம் பல தீர்ப்புகளை வழங்கியுள்ளது இதில் குறிப்பிடத்தக்கது. இரண்டு தீர்ப்புகள் இவர்களின் வழக்கோடு தொடர்புடையவையாகும் என்று சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பஞ்சாப் முதல்வராக இருந்த பிரதாப்சிங் கெய்ரோ சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கில் தயாசிங் மரண தண்டனை விதிக்கப்பட்டார். 1972 ஆம்ஆண்டில் சிறையில் இருந்த இவர் தனது மரண தண்டனையை குறைக்குமாறு கோரி ஆளுநருக்கும் பின்னர் குடியரசுத் தலைவருக்கும் கருணை மனுக்களை அனுப்பி வைத்தார். ஆனால் அவையாவும் நிராகரிக்கப்பட்ட நிலையில் 1991 ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு கடிதம் எழுதினார்.

அவருடைய கடிதத்தையே மனுவாகக் கொண்டு விசாரித்த நீதிபதிகள் ஜெ.எஸ்.வர்மா, எல்.எம்.சர்மா ஆகியோர் கொண்ட நீதிமன்ற அமர்வு நீண்டகாலம் அவர் சிறையில் அடைக்கப்பட்டிருந்ததை கருத்தில் கொண்டு அவருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையைஆயுள் தண்டனையாக குறைத்தது. இதேபோல குஜராத்தில் திவேணி பென் வழக்கை விசாரித்து உச்ச நீதிமன்றம் மரண தண்டனையை நிறைவேற்றுதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமற்றதா என்பதையும், அவ்வாறு கால தாமதம் ஆனதற்கு எந்தவிதத்திலாவது குற்றவாளி பொறுப்பாளரா என்பதையும் மட்டுமே சீர்தூக்கிப் பார்த்து தீர்ப்பளிக்கும் என்று கூறியுள்ளது. இதுமட்டுமன்றி தமிழ்நாட்டு மக்களிடையே நன்கு அறிமுகமான விஷ ஊசி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக் கப்பட்ட வைத்தி என்கிற வைத்தீஸ்வரம் வழக்கில் (1983) மரணதண்டனை விதிக்கப் பட்டு 8 ஆண்டுகள் ஆகியும் நிறைவேற்றப் படாததால் அவருடைய தண்டனையை ஆயுள் தண்டனையாக உச்ச நீதிமன்றம் குறைத்தது.

மேற்கண்ட வழக்குகள் அனைத்திலும் காட்டிலும் இந்த மூவர் 11 வருடங்கள் 4 மாதங்கள் கருணை மனு முடிவிற்காக காத்திருந்துள்ளனர். அப்படிப்பட்ட சூழலில் மிக மிக காலதாமதமாக அவர்களுடைய கருணை மனு நிராகரிக்கப்பட்டதால் அவர்களுடைய மரணதண்டனை இரத்து செய்யப்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது என்று சட்ட நிபு ணர்கள் கூறுகின்றனர்.

ஆகவே விரைவில் மூவரும் சென்னை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ள வழக்குகளில் நமக்கு உரிய நீதி கிடைக்கும். நமது குரலுக்கு உரிய நியாயம் கிட்டும். நாம் சோர்ந்து போகவோ, துவண்டு விடவோ தேவையில்லை என்று சீமான் கூறியுள்ளார்.(ஸ்ரீ-2)

பாரதச் செய்திகள்



தூக்குதண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோருக்கான தண்டனையை இரத்து செய்யக்கோரி தமிழகம் முழுவதும் பல்வேறு தரப்பினர் போராட்டம் நடத்திவருகின்றனர். சேலத்தில் நடைபெற்ற மனித சங்கிலி போராட்டத்தில் தாயும் சேயும் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம்.

# வன்னிப் போரின் பின் கைதான மருத்துவர்கள் இலங்கை அரசினால் பயிற்றுவிக்கப்பட்டனர்

## விக்கிலீக்ஸ் அம்பலம்

வன்னிப் போரின் பின்னர் கைது செய்யப்பட்ட மருத்துவர்கள் கொழும்பில் செய்தியாளர்களுக்கு எதனைக்கூறவேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தினால் பயிற்றுவிக்கப்பட்டதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்கத் தூதரகம்மூலம் இந்தத் தகவல் அமெரிக்காவில் உள்ள இராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாக விக்கிலீக்ஸில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வன்னிப்போரின் போது பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் இலங்கைப் படையினரால் கொல்லப்பட்டனர். அவற்றைக் குறித்த மருத்துவர்கள் வெளிநாட்டு ஊடகங்களுக்கு வெளிப்படுத்தினர். எனினும் போர் முடிந்த பின்னர் அந்த மருத்துவர்கள் இலங்கைப் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

தடுத்து வைக்கப்பட்ட காலத்தில் வன்னிப் போரின் போது அதிகளவான பொதுமக்கள் கொல்லப்பட்டதாக கூறுமாறு தமிழீழ விடுதலைப்புலிகள் தமக்கு அழுத்தம் கொடுத்ததாக குறித்த மருத்துவர்கள் கூறுவதாக அரசாங்கம் தெரிவித்து வந்தது. இதனை அவர்கள் செய்தியாளர்களுக்கு வெளிப்படையாக தெரிவிப்பர் என்று அரசாங்கம் தெரிவித்தது.

இதன்படி போரின்போது வன்னியில் பணியாற்றிய மருத்துவர்களான ரி.சத்தியமூர்த்தி, வரதராஜ், சண்முகராஜா ஆகியோர் தாம் போரின் போது வெளிநாட்டு ஊடகங்களுக்கு வெளியிட்ட தகவல்கள் பொய்யானவை என்று குறிப்பிட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அழுத்தம் காரணமாகவே அவ்வாறு தாம் கூறியதாக அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர். இதனை அமெரிக்க தூதரகத்தின் அதிகாரியான ஆர்மூர் என்பவர் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துக்கு கேபிள் செய்தி மூலம் அறிவித்துள்ளார்.

இந்த செய்தியாளர் சந்திப்பின் போது இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளை குறித்த மருத்துவர்கள் வரவேற்றிருந்தமையையும் விக்கிலீக்ஸ் வெளிப்படுத்தியுள்ளது. எனினும் அந்த மருத்துவர்கள் இலங்கை அரசாங்கத்தினால் பயிற்றுவிக்கப்பட்டு பொய் கூறியதை அடுத்தே அவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதாகவும் அவர்கள் தொடர்ந்தும் தமது பணிகளில் தொடர அனுமதிக்கப்பட்டதாகவும் அமெரிக்க தூதரகம் இராஜாங்கத் திணைக்களத்துக்கு கேபிள் மூலம் அறிவித்ததாக விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)


# பெங்களூரில் இலங்கையின் கொன்சியூலர் அலுவலகம்

(கொழும்பு)

இந்தியாவின் பெங்களூர் நகரில் இலங்கை கொன்சியூலர் அலுவலகமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகள் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

பெங்களூருக்கான இலங்கை கொன்சியூலர் நாயகமாக கே.சுதாகர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)



யா/ கரணவாய் தெற்கு விபுலானந்தா பாலர் பாடசாலை மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்:- மருதங்கேணி செய்தியாளர்)*

# இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு ஆயிரம் வீடுகள் நிர்மாணம்

(கொழும்பு)

வடமாகாணத்தில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்காக ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு தேசிய வீடமைப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் நாளை செவ்வாய்க்கிழமை 50 வீடுகளை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சபையின் தலைவர் ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் இந்த திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் காலங்களில் இந்த திட்டத்தினை கிழக்கு மாகாணத்திலும் முன்னெடுக்க உள்ளதாக சபையின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# 30 அரச நிறுவனங்களில் புதிய தலைவர்களை நியமிக்க தீர்மானம்

(கொழும்பு)

அரச கூட்டுத்தாபனம், சபைகள் அதிகார சபைகள், வங்கிகள் ஆகியவற்றுக்கு புதிதாக தலைவர்களை நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது. அதன்படி 30 அரச நிறுவனங்களுக்கான தலைவர் பதவிகள் மாற்றமடையவுள்ளதாக அரசதரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த திருத்தத்தின் போது இலஞ்ச மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் பிரதானிகள் சிலர் பதவியில் இருந்தும் விலக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசின் சிரேஷ்ட அதிகாரிகள் குறித்து ஆராய்ந்த பின்னரே ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

அரச நிறுவனங்களை புனரமைப்புச் செய்யும் நோக்கிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக ஒரே நிறுவனத்தில் தலைவர் பதவியை வகித்து கூட்டுத்தாபன சபைகள் மற்றும் வங்கித் தலைவர் பதவிகளை புனரமைக்கும் செயற்றிட்டத்தின் கீழ் வேறு நிறுவனங்களுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசின் கூட்டுத்தாபன சபைகள், வங்கி அதிகார சபைகள் மற்றும் சட்ட அதிகாரம் மிக்க 250 நிறுவனங்கள் இருப்பதும் இவைகளில் பாரிய முகாமைத்துவ சவால் மிக்க நிறுவனங்களிலுள்ள தலைமைப் பதவியில் மாத்திரம் எதிர்வரும் மாதங்களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அவர்களின் உத்தரவுக்கு எதிராக செயற்பட்ட தலைவர்கள் சிலர் இந்த மாற்றத்தின் போது பதவியில் இருந்து நிரந்தரமாக நீக்கப்படவுள்ளதாக அரசு தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-4)

# வட-கிழக்கில் 90 ஆயிரம் பெண்கள் குடும்பப் பராமரிப்பாளர்கள்

## சமூக சேவைகள் அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுமார் 90 ஆயிரம் பெண்கள் குடும்பப் பராமரிப்பாளர்களாக வாழ்கின்றனர் என சமூக சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

பெண்களை மையப்படுத்தியே இந்தக் குடும்பங்களின் வாழ்வாதாரம் அமைந்துள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த சில தசாப்தங்களாக பெண்கள் குடும்பத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் நிலைமை உயர்வடைந்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்ட போது சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

பெண்களை மையப்படுத்திய குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். குறிப்பாக சுயதொழில் முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று தசாப்தகாலமாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக கிழக்கு மாகாணத்தில் 49ஆயிரம் பெண்களும், வடக்கு மாகாணத்தில் 40 ஆயிரம் பெண்களும் விதவைகளாக வாழ்கின்றனர். (ஸ்ரீ-2)

# பாதுகாப்பு அமைச்சின் காணொளி அவுஸ்திரேலியாவில் திரையிடப்பட்டது

சனல் 4 காணொளிக்கு எதிராக பாதுகாப்பு அமைச்சினால் தயாரிக்கப்பட்ட காணொளி அவுஸ்திரேலியாவின் கன்பரா நகரத்தில், சில தினங்களுக்கு முன்னர் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சிலருக்கும் இந்த காணொளி காண்பிக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்போது, சனல் 4 காணொளியின் உண்மைத் தன்மை தொடர்பில் இந்தப் பிரதிநிதிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சின் பொது மக்கள் தொடர்பு பிரிவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சரத் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த காணொளி அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கை தூதுவராலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனிடையே சனல் 4 காணொளி காட்சிப்படுத்தப்பட்ட அமெரிக்கா, இங்கிலாந்து, சுவீடன், இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கும் பாதுகாப்பு அமைச்சினால் தயாரிக்கப்பட்ட காணொளி திரையிடப்படும் எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன் பொருட்டு குறித்த நாடுகளில் உள்ள இலங்கை தூதுவராலயங்கள் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)


சேவை நலன், மணிவிழா வாழ்த்து



இன்று மணிவிழாக்கானும்
ஆவரங்கால் மேற்கு
கிராம அலுவலர்
இராசா கணேசலிங்கம்
அவர்களின் 37 வருட
அர்ப்பணிப்பான
சேவையைப் பாராட்டி
அவரை மனதார
வாழ்த்துகின்றோம்.

மணிவிழா காணும் மாண்புறு கணேசா வாழ்க
பணிபல செய்த பண்புடை மனிதா வாழி வாழி
மெல்லெனப் பேசும் பண்பும், மெதுமையாய் பழகும்
நற்குடி பிறந்த இராசா பெற்ற எம் கணேசா, வாழி வாழி,
மெல்லென போகும் ஓய்வில் திழைத்திட இனிது வாழி

வாழ்த்தும்:-
கிராம அ.பி.சங்கம்
மத்திய சனசமூக நிலையம்
சர்வோதயா சனசமூக நிலையம்
விவேகானந்தா சனசமூக நிலையம்
பாரதி சனசமூக நிலையம்
அச்சுவேலி மேற்கு.

(6008)

# லிபியாவில் தொடர்ந்து துப்பாக்கிச் சண்டை

## டிரிபோலியில் பிணக்குவியல்



லிபியாவில் ஜனாதிபதி கடாபியின் 42 ஆண்டு கால ஆட்சிக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டம் வெற்றி பெற்றுள்ளது. தலைநகர் டிரிபோலி புரட்சிப் படையின் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்குள்ள பெரும்பாலான பகுதிகளை புரட்சிப்படை கைப்பற்றியது.

மீதமுள்ள இடங்களையும் பிடிக்க கடாபி இராணுவத்துடன் தொடர்ந்து துப்பாக்கிச் சண்டையும் குண்டுவீச்சு சம்பவங்களும் நடைபெறுகின்றது. இதனால் டிரிபோலியில் ஆங்காங்கே பிணங்கள் குவியலாக கிடக்கின்றன. வைத்தியசாலை பிணவறைகளில் அழுகிய உடல்கள் கேட்பாரற்று உள்ளன. சண்டையின் காரணமாக வைத்தியர்கள் , ஊழியர்கள் மற்றும் தாதிகளும் வைத்திசாலையை விட்டு வெளியேறிவிட்டனர்.

எனவே சிகிச்சை அளிக்க ஆளின்றி ஏராளமானவர்கள் உயிர் இழந்ததாக கூறப்படுகின்றது. அவர்களின் பிணங்கள் படுக்கையிலும் வராந்தாக்களிலும் கிடக்கின்றன. தலைநகரான டிரிபோலி வீழ்ந்து விட்டாலும் ஜனாதிபதி கடாபி இன்னும் புரட்சிப் படையிடம் சிக்கவில்லை. அவர் இரகசியமாக அமைத்து வைத்த பதுங்கு குழிகளிலும் தேடினார்கள். அங்கும் அவர் சிக்கவில்லை.இதற்கிடையே அவர் பக்கத்து நாடான அல்ஜீரியாவுக்கு தப்பி ஓடிவிட்டதாக எகிப்தின் மேனா என்ற நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

அல்ஜீரியா எல்லைப் பகுதியில் ஆயுதம் தாங்கிய 6 வாகனங்கள் சென்றதாகவும் அதில் கடாபியின் ஆதரவு முக்கிய அதிகாரிகளும் உடன் சென்றதாக தெரிகிறது. ஆனால் இதை நேட்டொ இராணுவம் உறுதிப்படுத்தவும் இல்லை. மறுக்கவும் இல்லை.

மேலும் கடாபியும் அவரது மகன்களும் பதுங்கி இருக்கும் இடம் குறித்த நம்ப தகுந்த தகவல் எதுவும் இல்லை என தேசிய மாற்று கவுன்சில் தலைவர் முஸ்தபா அப்தெல் ஜலீல் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# அல்கொய்தா அமைப்பின் முக்கிய தலைவர் பலி

அல்கொய்தா அமைப்பின் இரண்டாம் கட்ட தலைவரான அதியா அப்த் அல் ரகுமான் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கடந்த மே மாதம் பாகிஸ்தானில் அல் கொய்தா அமைப்பின் தலைவர் பின்லேடன் கொல்லப்பட்ட பின் அவ்வமைப்பின் தலைவராக பதவி ஏற்றார் அல் ரகுமான் என்பவர். லிபியாவைச் சேர்ந்த இவர் ஆப்கானிஸ்தானில் ரஷ்ய படைகளுக்கு எதிராக அல் கொய்தா போரிட்ட காலகட்டங்களில் அல் கொய்தாவில் இணைந்து பின்லேடனின் நம்பிக்கைக்கு உரியவராகத் திகழ்ந்தார்.

கடந்த 22 ஆம் திகதி ஆப்கான்-பாகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ள வஷிரிஸ்தான் மலைப் பகுதியில் பதுங்கியிருந்த போது கொல்லப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இருப்பினும் கொல்லப்பட்ட விதம் குறித்து தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. (ஸ்ரீ-2)

## சிங்கப்பூர் ஜனாதிபதி

# தேர்தலில் டோனிடான் வெற்றி



(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் கடந்த 18 ஆண்டுகளுக்கு பின் நேற்று முன்தினம் ஜனாதிபதி தேர்தல் நடந்தது. அதில் ஆளும் மக்கள் நடவடிக்கை கட்சி ஆதரவுடன் முன்னாள் துணை பிரதமர் டோனிடான் (வயது71) போட்டியிட்டார்.

இவரை எதிர்த்து டாக்டர் டான்செங் பாக், டான் ஜீ சே, டான் கின் லியான் ஆகியோர் களம் இறங்கினர். கடந்த 9 நாட்களாக அனல் பறக்கும் தேர்தல் பிரசாரம் இடம்பெற்றது.

இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் வாக்குப் பதிவு நடந்தது. அதில் 2 இலட்சம் பேர் வாக்களித்தனர். இரவு 8 மணிக்கு வாக்குப் பதிவு முடிந்தது. பின்னர் உடனே வாக்கு எண்ணும் பணி தொடங்கியது. நேற்று காலை தேர்தல் முடிவு அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அதில் முன்னாள் துணை பிரதமர் டோனிடான் 2 சதவீதம் வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார். இவர் 35.19 சதவீதம் வாக்குகள் பெற்றுள்ளார்.

இவரை எதிர்த்து போட்டியிட்ட டாக்டர் டான் செங் பாக்குக்கு 34.85 சதவீதம் வாக்குக் கிடைத்துள்ளது. மற்ற வேட்பாளர்களான டான் ஜீ சே 25.04 சதவீதமும் டான் நின் லியான் 4.91 சதவீதம் வாக்குகள் பெற்றுள்ளனர்.

வாக்கு எண்ணிக்கையின் போது டோனிடானுக்கும் டாக்டர் டான் செங் பாக்குக்கும் இடையே குறைந்த வாக்கு வித்தியாசம் இருந்தது. எனவே மறுபடியும் வாக்குகள் எண்ணப்பட்டு நடத்தப்பட்டு டொனிடான் வெற்றி பெற்றதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. (ஸ்ரீ-2)

# 6 ஆயிரம் இணையத்தளங்களை முடக்கியது சீன அரசாங்கம்

(பீஜிங்)

சக வியாபார போட்டியாளர்கள் மீது அவதூறு பிரசாரத்தில் ஈடுபட்டு வந்த மக்கள் தொடர்பு நிறுவனங்களின் 6 ஆயிரத்து 600 இணையத்தளங்களை சீன அரசாங்கம் முடக்கியுள்ளது.

இந்த மக்கள் தொடர்பு நிறுவனங்கள் இணையத்தளங்களின் வாயிலாக ஏனைய நிறுவனங்களின் மீது தவறான செய்திகளை பரப்புவது, அவர் ளின் செய்திகளை நீக்குவது போன்ற சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டு வந்தன.

இணையத்தளங்களில் சட்டவிரோத நடவடிக்கைகளை கண்டறிந்து முடக்கும் சிறப்பு இயக்கம் ஒன்றை கடந்த ஏப்ரல் மாதம் சீன அரசு தொடங்கியுள்ளது. இதுவரை 150 சட்ட விரோத செயல்களை கண்டறிந்து நடவடிக்கை எடுத்துள்ளது. (ஸ்ரீ-2)

# சிரிய இராணுவம் வன்முறை; 2,200 அப்பாவி பொதுமக்கள் பலி

## ஐ.நா.குழு குற்றச்சாட்டு

(டமாக்கஸ்)

சிரிய ஜனாதிபதி பஷர் அல் அசாத் உடனடியாகப் பதவி விலகக் கோரி தலைநகர் டமாக்கசில் நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு பேரணி நடத்தினர். அரசு வன்முறையில் இதுவரை இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா.விசாரணைக்குழு குற்றம் சாட்டியுள்ளது.

சிரியாவில் தலைநகர் டமாஸ்கசின் புறநகர்ப்பகுதியான கபார்சூசேயின் பல இடங்களில் நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கானோர் திரண்டு ஜனாதிபதிக்கு எதிராக போராட்டம் நடத்தினர்.

கபார்சூசேயின் பிரதான மசூதி ஒன்றில் நேற்று முன்தினம் தொழுகை முடிந்த பின் ஆர்ப்பாட்டம் நடந்தது. அந்த ஆர்ப்பாட்டத்தின் மீது சிரிய இராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் மூவர் கொல்லப்பட்டனர். அதே போல் நாட்டின் வடமேற்குப் பகுதியில் உள்ள லடாகியா துறைமுகத்திலும் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடந்தது.

டைர் அல் ஜோர் பகுதியில்ஆர்ப்பாட்டம் நடத்திய மக்கள் மீது இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலியாகினர்.

இதற்கிடையில் சிரியாவில் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட அரசு வன்முறை குறித்து விசாரிக்க குழு ஒன்றை ஐ.நா. அமைத்தது. தொடர்ந்து அதற்கு அனுமதி மறுத்த சிரிய அரசு கடந்த வாரம் அக்குழு விசாரணையில் ஈடுபட நாட்டிற்குள் வருவதற்கு அனுமதி அளித்தது. இதையடுத்து நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் நடந்த இடங்களுக்குச் சென்று அக்குழு விசாரணை நடத்தியது. இக் குழுவின் விசாரணை நேற்று முன்தினம் முடிவடைந்தது.

விசாரணை குறித்து ஐ.நா.செய்தித் தொடர்பாளர் பர்ஹான்ஹாக் கூறியதாவது,

அசாத்தின் இராணுவம் இதுவரை தன் வன்முறை நடவடிக்கையால் 2 ஆயிரத்து 200 அப்பாவி மக்களைக் கொன்று குவித்துள்ளது. மக்கள் மீதான அரசு வன்முறை நாடு முழுவதும் காணப்படவில்லை.

எனினும் மக்கள் எப்போதும் ஒருவித மிரட்டலிலும் தங்கள் பாதுகாப்பு குறித்த பீதியிலும் உள்ளனர். அதனால் அவர்களுக்கு உடனடியாக பாதுகாப்பளிக்க வேண்டும். ஐ.நா. குழு சென்ற இடங்களில் எப்போதும் அரசு அதிகாரிகள் இருந்திருந்தால் குழுவினர் நினைத்த இடங்களில் நினைத்தபடி விசாரணை நடத்த இயலவில்லை என ஹக் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. பாதுகாப்புக் குழுவில் சிரியா மீது தீர்மானம் கொண்டு வருவதில் இன்னும் ஒருமித்த முடிவு எட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)




# டிரிபோலியில் 150 சிறைக்கைதிகளை கடாபி இராணுவம் கொன்று குவித்தது

## புரட்சிப்படை தளபதி குற்றச்சாட்டு

லிபியாவில் ஜனாதிபதி கடாபியின் 42 ஆண்டுகால சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு தலைநகர் டிரிபோலியை புரட்சிப் படை கைப்பற்றியது கடாபியின் மாளிகை உள்ள பாப் அல்-கஷிசியா நகரில் மத்திய சிறைச் சாலை உள்ளது.

டிரிபோலியை புரட்சிப் படை கைப்பற்றிய தகவல் கிடைத்தும் அதில் அடைக்கப் பட்டிருந்த கைதிகள் மீது கடாபியின் இராணுவ வீரர்கள் கையெறி குண்டுகளை வீசினர். அதில் 150 கைதிகள் ப்ரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்தத் தகவலை புரட்சிப் படை தளபதி அப்தெல் நஜிப் தெரிவித்தார். டிரிபோலியின் 95 சதவீத புகுதி புரட்சிப் படையின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டதாகவும் அவர் கூறினார். இதுவரை புரட்சிப் படையினரின் தலைமையிடம் பெங்காசியில் செயற்பட்டு வந்தது. தற்போது அது லிபியாவுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. லிபியாவின் ஆயுத கிடங்குகள், ரொக்கெட் குண்டுகள், எதிர்ப்பு ஏவுகணைகள் டிரிபோலியில் உள்ளன. அவை தீவிரவாதிகள் மற்றும் கடாபியின் ஆதரவாளர்கள் கைகளில் கிடைக்காமல் தடுக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



சீனா சென்ற பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோஸி (இடது) அந்நாட்டு ஜனாதிபதி ஹுஜிந்தாவை தலைநகர் பீஜிங்கிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து கைலாகு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

உண்மையைக் காண்பது கடினமல்ல; அதைக் கண்டதும் கை விட்டுவிட்டு ஓடாமலிருப்பது தான் கடினம். -எட்ரியன் சில்ஸன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## இனப் பிரச்சினைக்கான தீர்வில் தமிழ்த் தரப்புகளிடம் தெளிவு உண்டா?

இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிப் பேசிக் கொள்ளும் நாம், பிரச்சினைக்கான தீர்வு எது என்பது பற்றி இன்னமும் ஒரு தெளிந்த முடிபுக்கு வரவில்லை என்றே கூறவேண்டும்.

தமிழ் மக்கள் உரிமையோடு, சுதந்திரமாக வாழவேண்டும் என்பது பொதுவானது. தமிழ் மக்கள் உரிமையோடு சுதந்திரமாக வாழ வேண்டுமாயின் அதற்கான தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பதை வரையறுத்துக் கொள்வது தமிழ் அரசியல் தலைமைகளின் தலையாய கடமை.

இருந்தும் தமிழ் அரசியல் தலைமைகள் அர்ப்பணிப்போடு சேவையாற்றத் தயாரில்லை. அவர்களுக்கு சொந்த வேலைகள் ஏராளம். எனவே சொந்த வேலைகளில் ஈடுபடும்போது குந்தியிருந்து இப்படித்தான் தீர்வுத்திட்டம் இருக்க வேண்டும் என ஆராய்ந்து அதனை எழுத்து வடிவிற்கு கொண்டு வருவது முடியாத காரியம்.

அண்மையில் கூட இந்தியாவிற்குச் சென்ற தமிழ் அரசியல் பிரதிநிதிகள், தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு எப்படி இருக்க வேண்டும் என அங்கிருந்து அவசர அவசரமாகத் தயாரித்ததாகத் தகவல்.

தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவும், எதிர்ப்பும் இருந்த அதேவேளை, தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தில் மாற்றங்களைச் செய்வதில் இந்தியப் பிரதிநிதியின் தனிப்பட்ட ஆதிக்கமும் இருந்ததாகக் கேள்வி.

எப்படியிருக்கிறது எங்கள் நிலைமை? இனப் பிரச்சினை என்பது இன்று, நேற்று ஆரம்பமானதல்ல. அதன் தொடக்கம் இலங்கையின் சுதந்திரத்தோடு ஆரம்பிக்கின்றது.

இருந்தும் எங்களால் இனப் பிரச்சினைக்கான தீர்வு இதுதான் என்று அறுதியிட்டு அச்சிடப்பட்ட பிரதிகளை வழங்கி அடித்துக் கூறும் திராணியில்லை.

ஒவ்வொருவரும் தத்தம் அறிவுக்கும்- சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறு தீர்வுத் திட்டங்களை முன்வைக்கின்றனர்.


இந் நிலைமையானது தமிழ் அரசியல் தலைமைகளின் அறிவுப் பஞ்சத்தை பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டும்.

எனவே இனிமேலாவது இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் எப்படி அமைய வேண்டும் என்பதை சகல தமிழ் அரசியல் பிரதிநிதிகளும் சேர்ந்து தயாரிக்க வேண்டும்.

அரசுடன் அல்லது வெளிநாடுகளுடன் யார் பேச்சுவார்த்தை நடத்தினாலும் அது பற்றிக் கவலையில்லை. எவர் பேசினாலும் முன்வைக்கப்படும் தீர்வு தமிழ் அரசியல் பிரதிநிதிகள் தயாரித்து அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவே இருக்கவேண்டும்.

இப்படியான ஒரு திட்டமிடல் எங்களிடம் இருக்குமாயின் மாநாடுகளில் பிடுங்குப்பட வேண்டிய சூழ்நிலையும் மற்றவர்களின் தலையீடுகளும் ஏற்படமாட்டாதல்லவா?

# அண்டி வருபவர்க்கு அபயம் தந்து காத்தருளும் செல்வச்சந்நிதி முருகன்



தமிழர்தம் பெருந் தெய்வமாகவும் அண்டி வருவார்க்கு எல்லாம் ஆதரவளிக்கும் தெய்வமாகவும் விளங்குபவன் செல்வச் சந்நிதியான்.

ஆயிராவசு என்ற சாதுவின் இடபமான பூவரசு மரத்தினை தல விருட்சமாகவும் வல்லியாறு என்று புராணங்களில் கூறப்படுகின்ற தொண்டைமானாற்றையும் ஆலமரச் சோலைகளையும் சூழலாகக் கொண்ட அமைவிடத்தில் எம் பெருமான் கோயில் கொண்டருள்கின்றான்.

கன்மவினைச் சூழ்வாலும், இன்னும் இப்பிறவியிலேயே செய்து பட்ட பழி பாவங்களாலும் அல்லற்பட்டு அலையும் ஆன்மாவுக்கு ஈடேற்றமும், முக்தியும் கொடுக்கவல்ல புண்ணிய பூமித்தலமாக இந்தச் செல்வச்சந்நிதி விளங்குகின்றது. இதனாற்தான் **சந்நிதியிலே பார்க்குமிடமெல்லாம் சிவலிங்கங்களே தெரிகின்றன...** என்று யோகர் சுவாமிகள் விதந்து உரைத்திருக்கின்றார்.

ஞான யோகியான சுவாமிகளின் கண்களுக்கு வேலும்-இலிங்கமும் இரண்டற நிறைந்து அருள் வீசும் ஆனந்த அனுபவத்தை கொடுத்திருக்கிறது.

அனுதினமும் அறுபத்துநான்கு ஆலமிலைகளில் அமுது செய்து வாய்கட்டிப் பூசைசெய்து எம்பெருமானை ஆராதிக்கும் கைங்கரியங்களோ தனித்துவமானவை. தமிழர் தம் பாரம்பரிய வழிபாட்டு முறைமைகளையும் இனம்காணச் செய்பவை. இவ்விதம் வேற்பூசையின் போது நிவேதிக்கப்பட்ட அமுதினை மருந்து ஒன்று சொல்லும் இயல்புக்கேற்ப தீராத உபாதைகளால் அவதிப்பட்டு தேற்றுவாரின்றி வந்த பலரை சுக பலமுள்ளவர்களாக மாற்றிய மகிமை இந்த மருந்தென்னும் அமுதுக்குரியதாகும்.

உற்றமாய், சுற்றமாய், மகவாய், தந்தையாய், துணையாய்,ஞானகுருவாய், அனைத்துமாய் அருள்வாய்யப்பா என்று கொண்டாடும் அடியவர்கள் மத்தியில் இன்றைய தினம் எம்பெருமான் கொடி

## செல்வச்சந்நிதி ஆலய கொடியேற்றப் பெருவிழா இன்றாகும்

யேற்றி பதினாறு நாட்கள் மஹோற்சவம் காண்கின்றான். இங்கு கொடித்தம்பமோ அதற்குரிய சாஸ்திரீய அனுட்டானங்களோ கிடையாது. உற்சவ காலத்தை அடையாளப்படுத்தும் வகையில் **வள்ளிக் கொடி** தானாகவே முளைக்கும். அதனைத் தொடர்ந்து பிரதமை கூடும் வேளையில் தமிழர் தம் பாரம்பரியச் சடங்காதாரத்தினை உணர்த்தும் வகையில் கொடியேற்றச் சடங்கும் இடம்பெறும்.

இக்கொடியேற்ற நாளன்று அதிகாலையில் எம் பெருமானுக்கு அபிஷேகங்கள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து பூசை நடைபெறும். இதன் பின் எழுந்தருளிக்கு அருகிலுள்ள வைரவருக்கு காப்பு கட்டப்படும். அதன் பின்னர் மூலஸ்தானப் பூசை முடிந்ததும் பிள்ளையாருக்கும் பூசை நடைபெறும்.

ஆலய வாசலிலுள்ள நந்திகேசுவரருக்கு முன்னால் வைக்கப்படும் கேடகத்தின் கலசத்தில் தெற்பை வைத்து ஏழு மாவிலைகளை சுற்றி பட்டுத் துண்டு கட்டி பூசை நடைறெும். இவ்வாறு கலச பூசை முடிந்ததும் வேலவனுக்கு பூசை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து எழுந்தருளிப் பூசை நடைபெற்று ஆலய வாசலில் வேற்கொடி ஏற்றப்படும்.

இவ்வாறு எழுந்தருளிவேலவர் கொடிப் பூசை இடம்பெற்ற கேடகத்தில் அதி பிரகாசமான ரூபனாய் நெற்றியில் வெற்றிலைத் திலகமிட்டு வீதியுலா வருவார்.

எம்பெருமானாம் சந்நிதியானுடைய பூசைகள் சடங்குகள் யாவும் மிகுந்த பிரியத்துடன் ஆற்றப்பட்டு வருவ தோடு நம் தமிழர் பண்பாட்டின் வாழ்வியல் அம்சங்களை எடுத்தியம்பி இம்மண்ணில் நமது பூர்வீகத்தை அடையாளப் படுத்தி அமைகின்றது.

ஆதியந்தமிலானை நிகர்த்தது போலவே

ஆலிலை யமுதருளும் சந்நிதி யானாம்-முத்தமிழ்

ஆண்டவன் வெற்றித் திடுவேலன், சிவபாலன்

ஆதித் தமிழ்க்கடவுள் முருகோனி னியல்பும் ஆனதுவே

துரை-கணேசமூர்த்தி
ஆசிரியர்-யாழ்ப்பாணக் கல்லூரி

## அண்ட சராசரங்கள் பூத்தவளே அனைத்துயிரும் காப்பவளே கொடியேற்று

சோதி வடிவானவனே துன்பமெலாம் தீர்ப்பவளே - கொடியேற்று

அண்ட சராசரங்கள் பூத்தவளே அனைத்துயிரும் காப்பவளே-கொடியேற்று

உற்றதுணை எவருமில்லை உன்னடியே சரணடைந்தோம்- கொடியேற்று

துர்க்கா துரந்தரியம்மா ஏற்றிப் போற்றி துதித்தவளே -கொடியேற்று

பொங்கு தெல்லி நகரமர்ந்த துர்க்கையம்மா -கொடியேற்று

வருந்திடும் அடியவரின் துயரங்களைத் தீர்ப்பதற்கு -கொடியேற்று

சாந்தி சமாதானம் தரணியில் நிலவிட -கொடியேற்று

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய கொடியேற்றம் இன்றாகும்

தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்

## புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு

(பூநகரி)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்கான சிரேஷ்ட பிரஜைகள் குழுவிற்கு நிர்வாகிகளைத் தெரிவதற்கான பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கண்டாவளை பிரதேச செயலகத்தில் பிரதேசசெயலர் சி.சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக க. தேவேந்திரன், உபதலைவராக க.மாணிக்கராசா, செயலாளராக சி.பெருமாள், பொருளாராக திருமதி அ.தவமணிதேவி ஆகியோரும் 6 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-12-84)

## பூநகரி பொலிஸாரால் விழிப்புணர்வு கருத்தரங்கு

பூநகரி பொலிஸ் பகுதியினரால் பூநகரியில் உள்ள 19 கிராமசேவகர் பிரிவுகளிலும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர். நேற்று முன்தினம் மட்டுவில்நாடு கிராம சேவகர் பிரிவில் உள்ள மக்களுக்கான கருத்தரங்கு பூநகரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மனோச் ரணகல தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் பொறுப்பதிகாரி தமதுரையில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் அந்நியோன்னியம் இருக்க வேண்டும் என்று நீங்கள் எந்தவித தயக்கமுமின்றி உங்கள் பிரச்சினைகளை எங்களோடு கதைக்கலாம். உங்களுக்கு உதவி செய்வதே எமது நோக்கம்.கிறிஸ் பூதம் என்ற கட்டுக்கதையை நம்ப வேண்டாமென்று குறிப்பிட்டதுடன் இங்கு அப்படி ஒரு பிரச்சினையும் இல்லை எனவும் குறிப்பிட்டு தங்களுடன் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கங்களையும் அறிவித்தார். (ஸ்ரீ-12-84)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### ஆசி மொழிகள்



✷ எந்தவித சுயநல நோக்கமும் இல்லாமல் பணம், புகழ் எதிலும் கவனம் செலுத்தாமல் நன்மை செய்ய வேண்டும் என்று மட்டும் எண்ணம் கொண்டவன் எவனோ அவன் புத்தரைப் போல மேன்மையான வன் ஆவான்.

✷ இந்த உலகத்தையே மாற்றி அமைக்கும் வல்லமை அவனிடத்தில் இருந்து எப்போதும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும்.

✷ உன்னால் ஒருவருக்கும் உதவி செய்ய முடியாது. மாறாக சேவை செய்ய மட்டுமே முடியும். உயிர்கள் யாவும் கடவுளின் குழந்தைகள். கடவுளின் குழந்தைக்கு தொண்டு செய்யும் பாக்கியத்தைப் பெற்றவர்கள் ஆண்டவனுக்கே சேவை செய்தவர்களாவர்.

✷ நம்மைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பது சுயநலமும் மிகப் பெரிய பாவமுமாகும். எல்லாப் பொருளும் எனக்கே வேண்டும் என்று நினைப்பவன் மிகக் கேவலமான வாழ்க்கை வாழ்கின்றான்.நானல்ல எல்லாம் நீயே என்று மற்றவர்களுக்காக வாழ்பவன் வாழ்க்கை கடவுளின் அன்பைப் பெறுகிறான்.

✷ இந்த உலகம் கோழைகளுக்காக ஏற்பட்டதல்ல. வெற்றியோ தோல்வியோ எது வந்தாலும் கொண்ட கடமையில் முழுமையாக ஈடுபட்டு வெற்றி பெறுவதற்காகவே நாம் பிறந்திருக்கிறோம்.

# புத்தள சம்பவம் தொடர்பான —விசாரணைகள் பூர்த்தி—

(கொழும்பு)
கடந்த சில நாட்களாக வெளியாகி வரும் கிறிஸ் மர்ம மனிதர் தொடர்பான உண்மை நிலை தற்போது வெளியிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பாக புத்தளம் பிரதேசத்திலும் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.
இந்த சம்பவத்தை அடுத்து ஏற்பட்ட பதற்ற நிலையை அடுத்து தனிப்பட்டவர்கள் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை கொலை செய்துள்ளனர்.
இந்த கொலை தொடர்பாக பொலிஸாரி னால் மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணை களின் மூலம் இது முற்று முழுதாக வதந்தி அடிப்படையிலேயே இடம்பெற்றமை தெரிய வந்துள்ளது.
தற்போது புத்தளம் தொடர்பான விசார ணைகளின் இறுதிக்கட்டத்திற்கு வந்துள்ள தாக வட மேற்கு பிரதி பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# பிறந்தநாள் விழாவில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் பலி

(கொழும்பு)
பெந்தோட்டை தேத்துவ பகுதியில் பிறந்த நாள் நிகழ்வொன்றின் போது மேற்கொள் ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
பிறந்தநாள் நிகழ்வின் போது இரண்டு குழுக்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் உக்கிரமடைந்த நிலையில் துப்பாக்கிப் பிர யோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலி ஸார் குறிப்பிடுகின்றனர்.
நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்த சம் பவத்தில் சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ள தாகவும் சம்பவத்துடனும் தொடர்புடைய மூவரைக்கைதுசெய்தற்கானவிசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பெந்தோட்டை பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஶ்ரீ-4)


# அப்புத்தளை இரட்டைக் கொலை ஐந்து சந்தேகநபர் கைது

(கொழும்பு)
அப்புத்தளை தொடட்லாலை தோட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பில் ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சந்தேகநபர்கள் அப்பிரதேசத்தை சேர்ந் தவர்கள் என்றும் அவர்கள் நேற்று முன் தினம் பண்டாரவளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளனர்.
தோட்டத்திற்கு வர்த்தக நடவடிக்கைகளுக் காக சென்ற மொனராகல பிரதேசத்தைச் சேர்ந்த இருவரை சந்தேகத்திற்கிடமான நபர் கள் என கருதி தாக்குதல் நடத்தியமையி னால் அவர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத் தக்கது. (ஶ்ரீ-2)

# புன்னை நீராவி கிராமசேவகர் பிரிவில் இலவச நடமாடும் வைத்தியசேவை

## 150 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

(பூநகரி)
ஹெல்ப் ஏஜ் நிறுவ னத்தின் ஒழுங்குபடுத் தலில் வைத்தியவசதி கள் அற்ற கண்டாவளை பிரதேச செயலர் பிரி வில் உள்ள புன்னை நீராவி கிராமசேவகர் பிரி வில் கடந்த வாரம் இல வச நடமாடும் வைத்திய சேவை ஹெல்ப் ஏஜ் நிறுவன வைத்திய அதிகாரி ஆர்.ஏ.பண் டிதரத்ன தலைமையில் நடைபெற்றது.



இதில் வருகைதந்த வைத்தியர் குழு வினால் காலை தொடக்கம் மாலைவரை 150 க்கு மேற்பட்ட நோயாளிகளுக்கு பல்வேறு சிகிச்சைகளும் வழங்கப்பட்டன.
இக்கோவையை திறம்பட நடத்துவதற் கான சகல ஏற்பாடுகளையும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவு சிரேஷ்ட பிரஜைகள் குழு நிர்வாகிகள் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-12-84)

# முருகனைச் சந்திக்க நளினி,ஹரித்திரா வருகை

(வேலூர்)
ராஜீவ் கொலை வழக்கில் முருகன், சாந் தன், பேரறிவாளன் ஆகியோர் மூவருக்கும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி வேலூர் சிறையில் தூக்குத் தண்டனை நிறை வேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
இதனையடுத்து மூவரின் குடும்பத்தின ருக்கும் சிறைத்துறையினர் முறைப்படி தக வல் கொடுத்துள்ளனர். இந்த மூன்று பேரை யும் தூக்கிலிட்ட பின் அவர்களது உடல்களை பெற்றுச் செல்லும்படி கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.
முருகனைச் சந்திக்க அவரது மனைவி நளினி, மகள் ஹரித்திரா ஆகியோர் இன்று திங்கட்கிழமை வேலூர் செல்கின்றனர்.
அதேவேளை பேரறிவாளன் தாய் அற்பு தாம்மாள், தந்தை குயில்தாசன் ஆகியோ ரும் இன்று வேலூர் சிறைக்கு சென்று பேரறி வாளனைச் சந்திக்கின்றனர். (ஶ்ரீ-2)

# மரண அறிவித்தல்

## சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் சண்முகநாதக்குருக்கள் (வரதராஜக் குருக்கள்)



ஊர்காவற்றுறை புளியங் கூடலைப் பிறப்பிடமாக வும், தலங்காவல் பிள்ளை யார் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் ஆலய பிரதமகுரு வாகிய சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் சண்முகநாதக் குருக்கள் (வரதராஜக்குருக் கள்) 27.08.2011 சனிக் கிழமை காலமானார்.
அன்னார் காலஞ் சென்ற சோமசுந்தரக் குருக் கள் -கும்புலட்சுமி தம்பதிக ளின் புதல்வனும், இந்திரா தேவியின் அன்புக் கணவ ரும், காலஞ்சென்ற அருளா நந்தஐயர்- இராஜேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், ருக்குமணி அம்மா, ஏகாம்பாள், சகுந்தலாதேவி, பாலசந்திரசர்மா, காலஞ்சென்ற சத்தியபாமா ஆகியோரின் அன்புச் சகோதரரும், யசோதா, லோகேந்திர சர்மா, கௌசல்யா, கஜேந்திரசர்மா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், வித்தியானந்தசர்மா, ஞானச்சந்திரசர்மா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெகர்சிதாவின் அன்புத் தாத்தாவும், சற்குணராஜா, இராசலட்சுமியின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29.08.2011 இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பாற்பண்ணை வீதி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :-
குடும்பத்தினர்
தலங்காவல் பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி.
(6010) தொ.பே: 0213737759

# முதலில் யாருக்கு தூக்கு? குலுக்கல் முறையில் தேர்வு

வேலூர் சிறையில் எதிர்வரும் 9ஆம் திகதி தூக்கிலிடப்படும் மூவரிடமும் கடைசி ஆசை தெரிவிக்கும்படி கேட்கப்பட்டு , அவர் களுக்கான தூக்கிலிடும் நேரமும் முடிவு செய்யப்பட்டுள்ளது. முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரையும் எதிர்வரும் செப்டெம்பர் 9 ஆம் திகதி தூக்கில் போட சிறைத்துறை நிர்வாகம் முடிவு செய்து ள்ளது. இதையடுத்து வேலூர் மத்திய சிறை க்கு மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள் ளது.
சிறை உள் கேட் வரை பத்திரிகையாளர் கள், போட்டோ கிராபர்கள் செல்ல நேற்று முன்தினம் முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது. சிறை அலுவலர்கள் வாகனங்கள் சோத னைக்குப் பின்னரே அனுமதிக்கப்படுகின் றன. சிறையைச் சுற்றி நான்கு இடங்களில் தடுப்புகள் அமைத்து 24 மணி நேரம் வாக னச் சோதனை நடக்கிறது.
வேலூர் திருவண்ணாமலை மாவட்டத் தில் 19 இடங்களில் உள்ள இலங்கைத் தமி ழர் முகாமில் 7 ஆயிரத்து 500 பேர் தங்கி யுள்ளனர். அவர்களும் தீவிர கண்காணிப் பில் வைக்கப்பட்டுள்ளனர்.
எதிர்வரும் செப்டெம்பர் 9ஆம் திகதி அதி காலை 4.30 மணி, 5.00 மணி, 5.30க்குள் என அடுத்தடுத்து மூன்று பேரையும் தூக்கில் போட முடிவு செய்துள்ளனர். முதலில் யாரை தூக்கிலிடுவது என்பது குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படும்.
ஒரே சமயத்தில் இருவரை மட்டுமே வேலூர் சிறையில் தூக்கு போட வசதி உள்ளதால் சேலம் சிறையில் ஒருவரை தூக்கில் போட அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின் றனர்.
மூன்று பேரிடம் கடைசி ஆசை என்ன? என்று தெரிவிக்கும்படி எழுத்துமூலம் கேட் கப்பட்டுள்ளது. முருகன் தினமும் காலை 6 மணிக்கு வாக்கிங் செல்வார். நேற்று முன் தினம் முதல் வாக்கிங் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.
சிறைத் துறை நேரடி கண்காணிப்பில் தனித்தனி செல்களில் அடைக்கப்பட்ட இம்மூ வருக்கும் சிறை கண்காணிப்பாளர் ஆய்வு செய்த பின் உணவு தரப்படுகிறது.
பத்திரிகைகள் படிக்க, ரிவி பார்க்க, ரேடியோ கேட்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளதோடு தினம் 4 மணி நேரத்திற்கு ஒருமுறை மருத் துவப் பரிசோதனை செய்யப்படுகிறது. சை லேந்திர பாபு நேற்று முன்தினம் சிறைக்கு வந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து டி.ஐ.ஜி மற்றும் எஸ்.பி யுடன் நான்கு மணி நேரம் ஆலோசனை நடத்தினார். (ஶ்ரீ-4)

# புதிய அங்கத்தவர்கள் பதவியேற்பு வைபவம்

லயன்ஸ் கழகத்தின் கிளிநொச்சி வட்ட 2011, 2012 ஆம் ஆண்டிற்கான புதிய அங் கத்தவர்களின் பதவியேற்பு இன்று மாலை.6 மணிக்கு கிளிநொச்சி பழைய வைத்தியசாலை மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட லயன்ஸ் கழகத்தின் தலைவர் ஏ.பங்கயச்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக முதலாவது மாவட்ட ஆளுநர் லயன் எஸ். எஸ்.தங்கராஜா, லயன் சீமாட்டி ஜெயசோதி ஆகியோரும் கௌரவ விருந்தினராக கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஶ்ரீ-12)

# இறுதிப் போட்டிக்கு வோஸ்னியாக்கி தகுதி

(நியூஹேவன்)

நியூ ஹேவன் ஓபன் டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டிக்கு டென்மார்க்கின் வோஸ்னியாக்கி முன்னேறினார்.

நியூ ஹேவன் ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவின் நியூஹேவன் நகரில் நடக்கிறது. இதில் பெண்களுக்கான ஒற்றையர் அரையிறுதியில் டென்மார்க்கின் வோஸ்னியாக்கி, இத்தாலியின் பிரான்சிஸ்காவை சந்தித்தார்.

இதில் வோஸ்னியாக்கி 7:6, 6:3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இறுதிப் போட்டியில் செக் குடியரசின் பெட்ரா செட்கோவ்ஸ்காவுடன் மோதவுள்ளார்.

# அமெரிக்க ஓபன் டென்னிஸ்

# நியூயோர்க்கில் இன்று ஆரம்பம்

## பரிசுத்தொகை ரூபாய் 200 கோடி

(நியூயோர்க்)

ஆண்டின் கடைசி கிராண்ட்சிலாம் தொடரான யு.எஸ். ஓபன், நியூயோர்க் நகரில் இன்று ஆரம்பமாகிறது. ஒற்றையர் பிரிவில் மட்டும் மொத்தம் 128 ஆட்டங்கள் நடக்கிறது. ஆண் மற்றும் பெண்கள் பிரிவிற்கு மொத்தம் ஒற்றையர் பிரிவில் மட்டும் ரூபாய் 200 கோடி பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பியன் பட்டம் வெல்பவர்களுக்கு ரூபாய் 20 கோடி பரிசுடன் வெற்றிக்கிண்ணம் கிடைக்கும். ஆண்கள் பிரிவில் முதல் நிலை வீரரான செர்பியாவின் ஜோகோவிக், ரோஜர் பெடரர், ரபேல் நடால் உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் களமிறங்குகின்றனர்.


பெண்கள் பிரிவில் நாலி, ஷரபோவா, வோஸ்னியாக்கி, செரீனா வில்லியம்ஸ், வீனஸ் வில்லியம்ஸ், நடியா பெட்ரோவா உள்ளிட்ட நட்சத்திர வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இந்தியாவிலிருந்து சோம்தேவ் வர்மன், சானியா, மகேஷ்பூபதி, லியாண்டர்பயஸ், ரோகன் போபண்ணா விளையாடுகின்றனர்.

தொடக்க நாளான இன்று ரஷ்யாவின் ஷரபோவா தனது முதல் சுற்றில் இங்கிலாந்தின் ஹீதர்வோட்சனை எதிர்கொள்கிறார். வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா), வெஸ்னா (ரஷ்யா), நடியா பெட்ரோவா (ரஷ்யா), யங்ஜங்சென் (சீனதைபே) மோதுகின்றனர். ஆண்கள் பிரிவில் நடைபெறும் முக்கிய ஆட்டத்தில் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), ஹெரால்டோ (கொலம்பியா) மோதுகின்றனர்.

# 100 மீற்றர் ஓட்டத்தில் யொஹான் பிளேக் சம்பியன்

## உசைன் போல்ட் தகுதி நீக்கம்



தென்கொரியாவின் டேகுவில் நடைபெறும் உலக தடகள சம்பியன்ஷிப் போட்டிகளின் 100 மீ. ஓட்டத்தில் ஜமைக்கா வீரர் யொஹான் பிளேக் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

இப்போட்டியில் நேற்று நடைபெற்ற 100 மீற்றர் ஓட்டத்தில் நடப்பு சம்பியனும் உலக சாதனையாளரும் ஒலிம்பிக் சம்பியனுமான உசைன் போல்ட் போட்டியை தவறாக ஆரம்பித்ததன் காரணமாக தகுதி நீக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யொஹான் பிளேக் 9.92 வினாடிகளில் குறித்த தூரத்தை ஓடி முடித்தார். அமெரிக்காவின் வால்டர் டிக்ஸ் 10.08 வினாடிகளில் ஓடி வெள்ளிப்பதக்கத்தையும் சென் கிட்ஜ் அன்ட் நேவிஸ் நாட்டு வீரர் கிம் கொலின்ஸ் 10.09 வினாடிகளில் ஓடி வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

# இங்கிலாந்து அணி அறிவிப்பு

இந்திய அணியுடனான இருபது-20 மற்றும் ஒருநாள் போட்டித் தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு நாள் தொடரில் அதிரடி சகலதுறை வீரர் கெவின் பீற்றர்சனுக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளிடையேயான ஒரேஒரு இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் நடக்க உள்ளன. இந்த போட்டிகளுக்கான இங்கிலாந்து அணி கடந்த வெள்ளிக்கிழமை தேர்வு செய்யப்பட்டது.

டெஸ்ட் தொடரில் சிறப்பாக விளையாடிய கெவின் பீற்றர்சனுக்கு ஒருநாள் தொடரில் ஓய்வளிக்கப்படுவதாக தேர்வுக்குழு சார்பில் ஜெப் மில்லர் அறிவித்தார். அயர்லாந்து அணிக்கு எதிராக அறிமுக வீரராகக் களமிறங்கிய பென் ஸ்டோக்ஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஜோஸ்பட்லர், அலெக்ஸ்ஹேல்ஸ்போன்ற இளம் வீரர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இருபது-20 அணி: ஸ்ரூவர்ட் பிரோட் (தலைவர்), ரவிபோப்ரா, டிம் பிரேஸ்னன், ஜோஸ் பட்லர், ஜேட் டென்பாக், ஸ்டீவன் பின், அலெக்ஸ் ஹேல்ஸ், கிரெய்க் கீஸ்வெட்டர் (விக்கெட் காப்பாளர்), இயான் மார்கன், சமித்பட்டேல், கெவின் பீற்றர்சன், பென் ஸ்டோக்ஸ், கிரீம் சுவான்

ஒருநாள் அணி: அலஸ்டர்குக் (அணித் தலைவர்), ஜேம்ஸ் அண்டர்சன், இயன் பெல், ரவி போப்ரா, டிம் பிரேஸ்னன், ஸ்டுவர்ட் பிரோட், ஜேட் டென்பாக், ஸ்டீவன் பின், கிரெய்க் கீஸ்வெட்டர், இயான் மோர்கன், சமித் பட்டேல், பென் ஸ்டோக்ஸ், கிரீம் சுவான், ஜொனாதன் ரோட்,

# இந்தியா - பாக். மோதும் கிரிக்கெட் தொடர் உறுதி

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டு இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடத் திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில் இந்திய அணி தொடர்ச்சியாக போட்டிகளில் பங்கேற்று வருவதால் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டி அட்டவணை தயாரிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே போட்டி தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் இஜாஸ்பட் கடந்த சில தினங்களுக்கு முன்பு இந்தியாவுக்கு வந்து முக்கிய அதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்நிலையில் இந்தியா- பாகிஸ்தான் போட்டியை நடத்த இருதரப்பு அரசும் சம்மதம் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

எனினும் முறைப்படியான அறிவிப்பு வெளியாகவில்லை. போட்டி அபுதாபியில் வைத்து நடத்தப்படலாம் என தெரிகிறது.

# ஆசியக் கிண்ண கிரிக்கெட்; 2012 மார்ச்சில் நடைபெறும்

ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் பங்களா தேஷில் நடத்தப்படும் என ஐ.சி.சி. அறிவித்துள்ளது. இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை ஆகிய 4 நாடுகள் தொடரில் கலந்து கொண்டு பலப்பரீட்சை நடத்த உள்ளன.

ஒரு அணி மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோதும். புள்ளிகள் அடிப்படையில் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் மார்ச் 28ஆம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டியில் மோதும்.

முதல் ஆட்டம் மார்ச் 12ஆம் திகதி நடக்கிறது. இதில் பங்களாதேஷ், பாகிஸ்தான் மோதுகின்றன. இலங்கை அணி தனது முதல் ஆட்டத்தில் மார்ச் 13ஆம் திகதி இந்திய அணியை எதிர்கொள்கிறது.

# உலக தடகள சம்பியன்ஷிப் தொடர்

# தென்கொரியாவில் கோலாகல ஆரம்பம்

## முதல் தங்கம் கென்யாவுக்கு

(டேகு)

உலக தடகள சம்பியன்ஷிப் தொடரின் முதல் தங்கப்பதக்கத்தை கென்ய வீராங்கனை எட்னா கிப்ளகாட் வென்றார். மிக நீண்ட தூரம் கொண்ட மரதன் ஓட்டத்தில் அசத்திய இவர் முதலிடம் பெற்றார். தென்கொரியாவில் உள்ள டேகு நகரில் 13- வது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டிகள் நேற்று முன்தினம் கோலாகலமாக ஆரம்பமானது. கலைஞர்களின் ஆடல் பாடல் நிகழ்ச்சிகளுடன் ஆரம்ப விழா களைகட்டியது.

இம்முறை உலகின் 203 நாடுகள் பங்கேற்கின்றன. செப்டம்பர் 4 திகதி இப்போட்டிகள் நிறைவு பெறுகின்றன. நேற்று முன்தினம் நடந்த பெண்களுக்கான மரதன் ஓட்டத்தில் (42.195 கி.மீ) கென்ய வீராங்கனை எட்னா கிப்ளாகாட் ஆரம்பத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்தினர் போட்டி முடிய 14 நிமிடங்கள் இருந்த போது தண்ணீர் போத்தல்களை பெறும்போது சக வீராங்கனை ஷெரான் செரோப்புடன் மோதிக் கொண்டார். இதனால் கீழே விழுந்த இவரது முழங்காலில் அடிபட்டு லேசாக இரத்தம்வந்தது.

இதனை பொருட்படுத்தாது ஓடிய கிப்ளாகாட் 2 மணிநேரம் 28 நிமிடங்கள்43 வினாடிகளில் பந்தய தூரத்தை கடந்து தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். 17 வினாடிகள் பின்தங்கிய சக வீராங்கனை பிரிஸ்கா ஜெப்தூ(2:29:00) வெள்ளி வென்றார். மற்றொரு கென்ய நட்சத்திரம் ஷெரான் செரோப் (2:29:14) வெண்கலம் வென்றார்.

### அசத்தல் அம்மா

இரண்டு குழந்தைகளுக்கு அம்மாவான கிப்ளாகாட் பொலிஸாக பணியாற்றுகிறார். தனது வெற்றி குறித்து 31வயதான இவர் கூறுகையில்,

முதல் முறையாக உலக சம்பியன் ஷிப் தொடரில் தங்கம் வென்றது மகிழ்ச்சி அளிக்கின்றது இதற்காக ஸ்பெஷல் திட்டம் எதுவும் வகுக்கவில்லை 32 வது கி.மீ இல் இருந்து எனது வேகத்தை அதிகரித்தேன் இதையடுத்து எதியோப்பிய வீராங்கனைகளால் என்னை நெருங்க முடியவில்லை.

கீழே விழுந்த போது முழங்காலில் லேசாக இரத்தம் வந்தது. நல்ல வலி இருந்தது. ஓட்டத்தை தொடர முடியுமா என அதிர்ச்சியடைந்தேன். ஆனாலும் எனது இலக்கில் உறுதியாக இருந்ததால் முதலிடம் பெற்றேன். தங்கப் பதக்கத்தை எனது இரு குழந்தைகளுக்கும் அர்ப்பணிக்கிறேன் என்றார்.



### மறக்க முடியாத பெருந்தன்மை

ஓட்டத்தின்போது கிப்ளாகாட் கீழே விழுந்தபோது சக வீராங்கனை ஷெரான் செரோப், அவரை முந்திச் செல்ல முயலவில்லையாம் மாறாக தூக்கிவிட்டுள்ளார். பின் அவர் சகஜநிலைமைக்கு திரும்பும் வரை ஷெரான் மற்றும் பிரிஸ்கா சுமார் ஒரு கி.மீ வரை மெதுவாக ஓடியுள்ளனர்.

இது குறித்து செரோப் கூறுகையில், கிப்ளாகாட் கீழே விழுந்ததற்கு எனது தவறு காரணமல்ல. ஆனாலும் எனது தோழி விழுந்தவுடன் ஓட்டத்தை நிறுத்தி அவரை தூக்கி விட்டேன். அவர் அதிர்ச்சியில் இருந்து மீளும்வரை மெதுவாக ஓடினேன் என்றார்.

### 1...2...3

உலக தடகள சம்பியன் சிப் மரதன் ஓட்டத்தில் முதல் மூன்று இடங்களை ஒரேநாட்டு வீராங்கனைகள் பெறுவது இதுவே முதல் முறை.

தங்கம், வெள்ளி, வெண்கலம் என [illegible]ன்று பதக்கங்களையும் வென்ற கென்ய [illegible]ங்கனைகள் தங்கள் நாட்டுக்கு பெருமை [illegible]ந்து புதிய வரலாறு படைத்துள்ளனர். இதன் மூல[illegible] மரதன் ஓட்டத்திற்கான கோப்பையைய கென்யா வென்றது.

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.
MAHARAJA FOOD PRODUCT
மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha, Wellawathte.
T.P:-0112360926,0112259849
கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே
யாழ்ப்பாணம்
aramex
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825

உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL

No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

# எனது அப்பாவைக் காப்...

அவருக்கு பெண் குழந்தை பிறந்தது. தற்போது 20 வயதாகும் ஹரித்திரா தற்போது பிரித்தானியாவில் தங்கியுள்ளார்.

இந் நிலையில் தனது தந்தை முருகனுக்கு தூக்குத்தண்டனையை விதிக்கப் போகின்றார்கள் என்ற செய்தி அறிந்து அவர் பெரும் கவலையில் உள்ளார். இச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நான் பிறந்தது முதலே பல்வேறு சிரமத்தை எதிர்நோக்கி வளர்ந்து வந்துள்ளேன். ஆரம்பத்தில் பெற்றோரைப் பிரிந்து பாட்டியின் பராமரிப்பில் வாழ்ந்தேன்.

பெற்றோரைப் பிரிந்து வாழ்ந்து வரும் நான் 12 வயதாக இருந்த போதுதான் கடைசியாக அவர்களைப் பார்த்தேன். அதன் பிறகு என்னால் அவர்களைச் சந்திக்க முடியவில்லை.

பெற்றோரைப் பார்க்க முடியவில்லை. அவர்களுடன் இருக்க முடியவில்லை. அவர்களுக்காக நான் ஏங்குகிறேன். அவர்களுடன் கூடவிருந்து வாழக் கொடுத்து வைக்கவில்லையே என்று கவலையாக இருக்கிறது.

இத்தனை நாட்களாக அவர்கள் சிறையில் இருக்கிறார்கள் என்ற நிம்மதியில் இருந்து வந்தேன். இப்போது அதையும் கூட பறிக்கப்பார்க்கிறார்களே. இது கொஞ்சமும் நியாயமில்லை.

இதைவிட ஒருவருக்கு கொடுமையான விடயம் எதுவும் இல்லை. யாருக்கும் இப்படி ஒரு நிலை வரக்கூடாது என்று கடவுளை வேண்டுகிறேன். வேறு என்ன சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை.

எனது தந்தையை தூக்கில் போடப் போகின்றார்கள் என்ற செய்தி வந்தது முதல் நான் தூக்கமின்றி தவித்து வருகிறேன். எனது அப்பாவைக் காப்பாற்ற முதலமைச்சர் ஜெயலலிதா நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும்.

இந்தியா வர நான் நுழைவு அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளேன். எனது அப்பாவைக் காப்பாற்றக்கோரி அங்கு பலர் போராடி வருகின்றனர். அவர்களுடன் சேர்ந்து போராட்டம் நடத்த நானும் விரும்புகிறேன் என இச்செவ்வியில் அவர் உருக்கமாகத் தெரிவித்துள்ளார். (ந-5)

# ஜெனிவாவில் இலங்கை...

மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் லத்தீன் அமெரிக்க நாடுகளின் குழுவை தனிப்படக் கவனித்துக் கொள்ளுமாறு ஜெனிவாவுக்கான இலங்கையின் புதிய தூதுவர் தாமரா குணநாயகம் கேட்கப்பட்டுள்ளார்.

மேலும் இலங்கையின் பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா நான்கு தென் அமெரிக்க நாடுகளுக்கான பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

கெளதமாலா, மெக்சிகோ, உருகுவே மற்றும் பெரு ஆகிய இந்த நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஜெனிவாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் ஆதரவுப் பரப்புரைகளை முறியடிக்க இலங்கை அரசாங்கம் தயாராக இருப்பதாக மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் ஆதரவு சக்திகளின் பரப்புரைகளை முறியடிக்க போருக்குப் பிந்திய அபிவிருத்தி மற்றும் மீள்குடியமர்வுத் திட்டங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் செல்வாக்குக்கு உட்பட்ட அனைத்துலக சக்திகள் போர்க்குற்றச்சாட்டுக்கள், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளைப் பயன்படுத்தி இந்த அமர்வில் இலங்கையை குறி வைக்கலாம் என்றும் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

செப்ரெம்பர் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் பங்கேற்கவுள்ள இலங்கை குழுவுக்கு மகிந்த சமரசிங்கவே தலைமையேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, ஜெனிவா கூட்டத் தொடரில் பங்கேற்க இம்முறை அமைச்சர்கள் மட்டத்திலான வலுவானதொரு குழுவை இலங்கை அனுப்பவுள்ளது.

அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான இந்தக் குழுவில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அமைச்சர்கள் நிமால் சிறிபால டி. சில்வா, அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன ஆகியோர் இடம்பெறவுள்ளனர். (ந-5)

# பயங்கரவாத சந்தேக...

சட்டத்தன்மையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் காணப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்களை சாதாரண சட்டங்களின் கீழ் விசாரணை செய்ய முடியாது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குறித்த நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் நோக்கில் புதிய சட்டமொன்று விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்த அவர், சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் வெளிநாடு சென்றுள்ளதாகவும் நாடு திரும்பியதன் பின்னர், சட்டமா அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்தி குறித்த சட்டமூலம் தொடர்பான வரைவுத்திட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

கட்டிட வடிவமைப்பு மற்றும் கட்டுமான வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்

Layden Lanka Construction

Head Office
94,Havelock Road ,Colombo-6
T.p. No. 0112559212
Branch
No.20, Venkatesan Veethy,Jaffna
T.p No. 0212221122
0712221122

# தூக்குத்...

இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, காஞ்சிபுரம் ஓரிக்கையைச் சேர்ந்தவர் செங்கொடி (27) இவர் மக்கள் மன்றம் இயக்கத்தில் உள்ளார்.

நேற்று மாலை காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் தூக்கை எதிர்த்து முழக்கமிட்டபடி தீக்குளித்தார். மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் செங்கொடி உயிரிழந்தார்.

இந் நிலையில் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் உயிரை காப்பாற்ற அரசுக்கு உருக்கமான கடிதம் எழுதி உள்ளார் செங்கொடி. இந்த கடிதம் தற்போது கிடைத்துள்ளது. 21 ஆண்டுகளாக சிறையில் வாடும் மூவரின் தூக்குத்தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று கடிதத்தில் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார். முதல்வர் ஜெயலலிதா இந்த விடயத்தில் தலையிட்டு தூக்குத் தண்டனையை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். (ந-5)

# தென்னா...

பல நாடுகளை உள்ளடக்கிய ஒன்றுபட்ட தென்னாபிரிக்காவின் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜக்கொப் ஸூமா உலகில் உள்ள பலம் பொருந்திய தலைவர்களில் ஒருவர்.

விடுதலைப் புலிகள் தென்னாபிரிக்க அதிபருடன் கொண்டுள்ள உறவுகள் குறித்து இலங்கை அரசு தற்போது தனது கவனத்தை திருப்பியுள்ளது. புலம் பெயர் மக்களின் போராட்டம் ஒரு புறம் இருக்க, மேற்குலகின் போர் குற்ற அழுத்தங்கள் மறுமுனையில் இருக்க ஏக காலத்தில் புலிகளின் மறைமுகப்பலம் தொடர்பாக இலங்கை அரசு தற்போது தனது கவனத்தை திருப்பியுள்ளது எனக் கொழும்பில் இருந்து கசியும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-5)

# புலிகள்...

சட்டத்தின் சரத்துக்களின் அடிப்படையிலேயே உயர் பாதுகாப்பு வலயங்கள் அறிவிக்கப்பட்டதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதுதடை விதிக்கப்பட்டதாகவும் இராணுவத்தினர் பொதுமக்களை கைது செய்வதற்கான அதிகாரம் ரத்து செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். எனினும் பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் மக்களை இராணுவத்தினர் கைது செய்ய முடியும் எனவும் கட்டடங்கள் மற்றும் இடங்களைபுகைப்படமெடுப்பதற்கு காணப்பட்ட தடையும் நீக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

நல்லூர் சிறப்பு விற்பனை நிலையத்தில்
கற்கும் வெளியீடு
விலை 10 /= மட்டுமே
(பின்வீதியில் அமைந்துள்ளது)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி
மீனலோசனி யோகரட்ணம்



அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரம் அடைகின்றோம்.

அன்னாரின் இழப்பினால் துயருறும் அவரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பா.அ.ச. பழைய மாணவர் சங்கம்.
யா/திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, திருநெல்வேலி.

## மரண அறிவித்தல்

### திருமதி யோகரட்ணம் மீனலோசனி

[ஆசிரியை]



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கெனடி லேன், திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட யோகரட்ணம் மீனலோசனி (ஆசிரியை, திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை) 28.08.2011 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் யோகரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், சொர்ணவடிவேல் அன்னப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மகளும், மதுரங்கன், சாயிரங்கன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை இராசம்மா ஆகியோரின் பாசமிகு மருமகளும் மங்கையற்கரசி (RDA), விக்னேஸ்வரி(லண்டன்), மதிவதனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் நாகேஸ்வரி, கோபாலகிருஸ்ணன், இராசலட்சுமி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.08.2011 இன்று திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் திருநெல்வேலி செம்பாடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கணவர்: யோகரட்ணம் (குஞ்சன்)
மைத்துனர்: கோபால் (நல்லூர்)

கெனடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

(இ)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.